# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

● வைகாசி - 2024



## காற்றுவெளி
**கலை இலக்கிய இதழ்**

வைகாசி - 2024

படைப்புக்கள் அனுப்ப :

neythal34@gmail.com

mahendran1954@hotmail.com

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- அட்டைப் படம் : இணையம்
- வடிவமைப்பு : நெகிழன்
- ஆலோசனைக்கு/நூல் அனுப்ப :

R.Mahendran,
34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk

- சந்தா : 12 இதழ்களுக்கு 8.00 பவுண்ட்
- R.Mahendran,

A/C No: 90759821
Sort.Code: 20-67-88,
SWIFTBIC BUKBGB22
IBAN GB80 BUKB 2067 8890 7598 21
BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


**வணக்கம்,**

யாவரும் நலமா?

வைகாசி இதழுடன்(2024)சந்திக்கின்றோம்.படைப்புக்கள் தந்துதவியோருக்கு எமது நன்றி.

எதிர்வரும் இதழ்(ஆனி 2024)இதழ் நமது ஈழத்து எழுத்தாளர் அமரர்.எஸ்.அகஸ்தியர் அவர்களின் ஞாபகார்த்த சிறப்பிதழாக வரவுள்ளதால் அவ்விதழுக்கான படைப்புக்களை(அவர் சார்ந்த புகைப்படங்களையும்) அனுப்பி இதழைச் சிறப்பியுங்கள்.

தொடர்ந்து கவிதைச்சிறப்பிதழ், சிறுகதைகளின் சிறப்பிதழ் என வெளிவரும்.இவ்வாண்டு இரண்டு நூல்களையும் காற்றுவெளி கொண்டுவரவுள்ளது.

படைப்பாளர்களுக்கான வாசல் திறந்தே இருக்கிறது.காற்றுவெளியும் காத்திருக்கிறது.

மூன்றாவது உலக மகா யுத்தம் பற்றிய அச்சம் மக்களிடையே ஏற்பட்டுள்ளதையும்,நோய் அச்சம் மேலும் பயமுறுத்தி வருவதையும் காண்கிறோம்.

நிறையவே பதிப்பகங்களும்,நூல்களும் வெளிவந்த வண்ணமாக இருப்பதைக்கண்கிறோம்.அனைத்துப் படைப்பாளர்களுக்கும் வாழ்த்துகளும்,நன்றியும்.. அயிரம் பூக்கள் மலர வேண்டும். எழுத்தின்,நூல்களின் ஆரோக்கியத்தையும், அவை மீதான கரிசனையையும் காலம் தீர்மானிக்கட்டும்.

நம்பிக்கைகள் தான் வாழ்க்கை.

தொடர்ந்து பயணிப்போம்.

நட்புடன்,
சோபா
*01/05/2024*

# படைப்பாளர்கள்

## கவிதைகள்

1. கண்ணன், தாரமங்கலம் சேலம் மாவட்டம்
2. மைத்திரிஅன்பு, காஞ்சிபுரம்.
3. நற்பவி மணிபாலா(திருப்பூர்)
4. மணிமேகலை சரவணன்
5. நந்தவனம் சந்திரசேகரன்(திருச்சி)
6. லக்ஷ்மி
7. பா.சிவகுமார்
8. இரா. வெங்கடேஸ் குமார்
9. இரஜகை நிலவன்(மும்பை)
10. சா.கா.பாரதி ராஜா
11. கவிஞர் மல்லை.மு இராமநாதன்
12. Dர் ஜலீலா முஸம்மில்(ஏறாவூர்)
13. கோவை ஆனந்தன்(கிணத்துக்கடவு)
14. தங்கேஸ்
15. கவிஜி
16. ச.சத்தியபானு
17. த. ரவீந்திரன்
18. மூசா விஜிலி(மருதமுனை)
19. அப்துல் சத்தார்(பாளையங்கோட்டை)
    (நன்றி:அநாமிகா ரிஷி)

## சிறுகதைகள்

1. கும்பகோணம் நௌஷாத் கான்
   .லி(அபுதாபி)
2. ரகுநாத் வ (மதுரை)
3. கமலினி கதிர்(சுவிற்சர்லாந்து)
4. பட்டுக்கோட்டைராஜா
5. சுந்தரிமணியன்
6. G. சியாமளா கோபு

## திரைப்படப்பிரதி

1. கே.எஸ்.சுதாகர்



**மைத்திரிஅன்பு, காஞ்சிபுரம்.**

# காத்திருப்பு

வியாபாரத்தை ஒட்டிய
வாசிப்புகளும் எடுத்துரைப்புகளும்
இலக்கியங்களும்
இயங்க மனமின்றி இயக்கமற்று
இறுதிவரை இருகிக் கிடக்கின்றன...

போதுமான தொட்டுணரலும்..
அன்பு தோய்ந்து வெளிப்பாயும்
சொல்லொன்றின் கூர்மையும்..
பழகிய பிரியத்தோடு
கை தொட்டு நீளும் சிரிப்பொன்றின்
ஆறுதலன்றி...
நெய்ந்து பிரித்த நுலிழையென
மெலிந்துபோன இதயங்களின்
இளைப்பாறலுக்கு
வேறெதுவும் தேவையில்லை...

உடைந்து உறுகுலைத்தாலும்
மணல் துகளெனச் சலித்துச் சிறுசானாலும்
ஏதும் மாறாத மண்ணுலகில்
மனித எதிர்ப்பார்ப்புகள் யாவும்
அன்பொன்றே...!

இனிக்கப் பேசும் சொற்களுக்கிடையே
அலங்காரங்கள் ஏதுமற்ற
அழுக்கு படிந்த
அன்பின் அவிழ்ப்பு
அள்ளி எடுத்து அணைத்துகொள்ள
முற்படும் எல்லாவுமாக...

உயிர் தெய்ப்புகள் யாவும்
உணர்வின் உறவுடைப்புகளானபோதும்
மெது மெதுவாகத் தொட்டுப் பற்றிக் கொள்ளும்
கதகதப்பின் இறுக்கம் அதிகரிக்க
வலி சூழ்ந்த வாழ்வொன்று
அசொகரியம் இழந்து
அழகாகிறது.



அன்பானவர்களின்
நரம்பிழைகளை இணையுங்கள்.!
நேயம் பகிர்ந்து..
காதல் பேசி.. கசிந்துருகி..
கண்களால் விழுங்க - பெற..
முயற்சியுங்கள்.
முண்டியடியுங்கள்..

கைவிடப் பெறாத
முழு அன்பின் முடிச்சிக்குள்
முடியாது போனாலும்..

குளுமையின் பரவலென –
ஜன்னல் கண்ணாடிகளை உடைத்திராத
மெல்லிய காற்றாடலென –
நிறைகுள அன்பைத் தேக்கிய
கண்களின் உளநுகர்வென –
உணர்வாய் உயிர் சேரும்
உன்னதத் தருணங்களிலேனும்
கசிந்துருகவும் கரைந்து போகவுமான
உண்மையுடனான ஊடுருவலை
உறுதிப்படுத்துங்கள்

தடயங்கள் ஏதுமின்றி..!

❍



காத்திருப்புகள் காணவில்லை
தனிமை துரத்தும் வெளியிடம் நோக்கி
வந்தமரும் என்னிடம்
ஏதேதோ எதிர்ப்பார்ப்புகள்
சதாகிக்கின்றன.

எதிர்ப்பார்ப்பின்றி
யார் யாருக்காகவோ காத்திருந்தவர்கள்
கண்டடைதலினூடே கரம் சேர்கின்றனர்

தொட்டு - தொடர்ந்து
கொண்டாடும் குதூகளிப்புடன்
விளையாட்டாய்
அறிமுகமில்லாதவர்களின் ‘அன்பாதல்’
என்னோடு அமர்ந்திருந்தவர்களை
என்னிலிருந்து அப்புறப்படுத்த....
அப்பொழுதும் உணர்கிறேன்
வரபெறாத எனதெதிர்ப்பார்ப்பு
தனிமை தவமென...

யாரோடும் பேசாமல்
என்னைப் போலவே
என்னத்தனை சொற்களும் மௌனிக்க..

முகமலர்ந்து – மூர்ச்சையாகி
காத்திருத்தலினூடே
காணாமல் போகிறேன் நான்.



**கண்ணன், தாரமங்கலம்**

திருப்பூரிலிருந்து சேலம்
அரசுப் பேருந்தின் முன்னிருக்கையில்
ஒட்ட வெட்டிய முடியும், குங்குமப் பொட்டும்
வைத்த சிறுவனுக்கு
கரண்டி கரண்டியாக
அவனம்மை
புளி சாதம் ஊட்ட
ஒரே ஒரு நொடி
அவன் இருக்கையில் அமர்ந்து
அம்மாவிடம் வாய்திறந்து கேட்கிறேன்
'அம்மா, ஆ'

❍

யானைமீதமர்ந்த சிறுமி
'வீட்டுக்குப் போ, சாப்பிடனும்' என்றாள்
'பழம் குடு, பசிக்குது' என்றது
ஊட்டிவிடுகையில் சப்புக்கொட்டி சாப்பிட்டதைக்
கண்டேன்
கோவில் வாசலில் நின்றிருக்கும்
கல்யானை மீதமர்ந்து
சிறுமியொருவள்
சாலையில் போனதாக
மாலையில் யாரேனும் சொல்லக்கூடும்

❍


கப்பல் கேப்டனின் முத்திரை பதித்த கதவைத்
திறந்து உள்ளே நுழைந்தால்
நாற்காலிக்கும் முதுகுக்கு மேல் ஒரு தலையிருக்கும்
அமர்ந்தவுடன் உள்ளிருந்த கொம்புகள் மெதுவாக
வெளியில் வரும்
உள்ளே நுழைந்தவரை
அமரச் சொல்ல மறந்து விடுகிறேன்
சில சமயம் என் குரல் என்னையும் அறியாமல்
தடித்து விடுகிறது
மேலாளரிடம் மட்டும் கொஞ்சம் தாழ்கிறது
எதிர்க்குரல்களை தெரிந்தே
பளபளக்கும் காலணியால் நசுக்கி விடுகிறேன்
லேசான ஏசியிலும்
மூச்சு முட்ட
கதவைத் திறந்து வெளியே
தலை தெறிக்க ஓடி வந்து
பிறருடன் அமர்ந்து விட்டேன்.

நற்பவி மணிபாலா (திருப்பூர்)

# பெண்ணின் பெருந்தக்க யாவுள..

*கண்ணின் மணியன்ன பெண்ணின் நல்லாள்!*
*கல்லைக் கனியாக்கும் சொல்லில் வல்லாள்!*
*காவியத்தலைவி யவள் அழகோவியம் போன்றாள்!*
*பாதாதிகேசம் பாராளும் அழகுடை சீராள்*
*போர் செய் வாள் அன்ன*
*வேல் விழி இரண்டும் பாழ்*
*செய் பகை அழிக்கும் போர்த்*
*தொழில் வேங்கை மங்கை அவள்- கங்கை*
*ஆதி அந்தம் பாதி- தந்த*
*ஜோதி சிவன் சக்தி!*
*ஆதிபராசக்தி வான் முதல் மண்*
*வரை ஆளும் பெண்ணரசி மங்கள*
*மகராசி பேசும் தமிழ் வீசும்/ கவரி பூசும் மஞ்சள்*
*மணக்கும்*
*சுவாசினி பிள்ளைத்தமிழ் சொல்லில் பிறந்த*
*பிள்ளை இலக்கியமாய் இலக்கணமாய் இருப்பவள்*
*இல்லத்தரசி அவள் மனைமாட்சி மானுட*
*மனசாட்சி நல்லோர்க்கு பெண் விசுவாசி*
*அல்லார்க்கு அவளே கொடும் ராட்சசி*
*வாழிய பெண்ணினம் ஊர் மெச்சி*
*தமிழ்த் தடாகமிசை தாமரை அன்ன*





# சுகமான சுமைகள்

கும்பகோணம் நௌஷாத் கான் .லி, அபுதாபி

ஏண்டி கிறுக்கச்சி

எத்தனை காலத்துக்கு தான் அந்த கிழவிக்கு பீ ,மூத்திரம் அள்ளிக்கிட்டு மாரடிக்க போற

நீயும் சின்ன புள்ள இல்லைடி ,ரெண்டு பிரசவமும் வயித்தை கிழிச்சு பெத்து இருக்க

உனக்கு வேற நாற்பதுக்கு மேல ஆகுது ,புள்ளைகளும் தலை எடுத்திடுச்சு அந்த கிழவிய குளிப்பாட்டுறதுக்கும் ,பேண்டா கழுவுறதுக்கும் தூக்கி எடுத்திட்டு போக உனக்கு உடம்புல தெம்பா இருக்கு, நீ இன்னும் இளம் இரத்தம் ஓடுற குமரி பொண்ணு இல்ல ஞாபகத்துல வச்சுக்கோ

இப்படியே சத்தான பால் ஊத்திக்கிட்டே அந்த கிழவியை பார்த்துக்கிட்டா இன்னும் மூணு தலைமுறைக்கு அந்த கிழவி உயிரோட இருப்பாடி

நான் சொல்லுறது உன் மண்டையில ஏறுதாடி செல்வி .உன் புருஷனுக்கும் ஒரு கை பக்கவாதம் வந்து ஒரு வருசமா வேலைக்கும் போறது இல்லை நீ தான் வேலைக்கு போய் உன் புருஷனையும் ,பிள்ளைகளையும் பார்த்துகிற ,ஓயாம வேலை பார்த்து கிடக்குற ,நீ இத்தனை வருஷம் பார்த்ததே போதும்டி பேசாம உன் மாமியார் கிழவிக்கு இளநீர் கொடுத்து நல்லெண்ணெய் தேய்ச்சு பச்சை தண்ணியில குளிக்க வச்சிடு ,இந்த மார்கழி மாசத்து குளிர்ல கிழவி ஜன்னி வந்தே செத்திடும்.

யாருக்கு என்ன தெரிய போகுது ,படுத்த படுக்கையா கிடக்குற கிழவி தானே ,யாருக்கும் உன் மேல சந்தேகம் வராது .நான் சொல்லுறதை கேளுடி ,உனக்கென்ன தலை எழுத்தா ,வருஷக்கணக்கா அந்த கிழவிய பார்க்கிறதுக்கு என்று சலித்து கொண்டே சொன்னாள் செல்வியின் அக்கா செண்பகம் ..

யாரும் பார்க்கலைன்னா என்ன வேணும்னாலும் செஞ்சிடலாமா அக்கா ,என் புருஷனை பெத்தவங்க எனக்கும் அம்மா தான் இன்னைக்கு அவங்களுக்கு நான் செய்யுற பணிவிடை அந்த கடவுளுக்கு செய்யுறதுக்கு சமம்க்கா

நீ சொல்லுற மாதிரியெல்லாம் நான் செஞ்சா என் மனசாட்சியே என்னை கொன்றிடும் இந்த கட்டை சுடுகாடு போறவரைக்கும் என் மாமியாருக்கு என்னால முடிஞ்சதை நான் செய்வேன் அக்கா

பிள்ளைகளின் கழிவுகளை சுத்தம் செய்ய எந்த பெற்றோரும் முகம் சுழிப்பதில்லை ,பிள்ளைகளை பாரமா நினைக்குறது இல்லை ஆனா இந்த பாழாய் போன சில மனுஷ ஜென்மங்க தான் வயதானவர்களை பாரமா நினைக்கிது. வயசு திமிர்ல இன்னைக்கு நீங்க ஒருவரை பாரமா நினைச்சா நாளைக்கு வயதானதுக்கு அப்புறம் உங்களை உங்க பிள்ளைகளே பாரமா நினைக்கும் .வாழக்கை முகம் பார்க்கும் கண்ணாடி போல நீங்க என்ன செஞ்சாலும் அதன் பிரதிபலிப்பு உங்களுக்கு பலனாய் கிடைக்கும் .

அப்போது ஒரு முனகல் சத்தம் கேட்கவும் பயபக்தியோடு தன் மாமியாருக்கு பணிவிடை செய்ய சென்றாள் செல்வி.

## மணிமேகலை சரவணன்

*மீளாவனம் தன்னில்*
*அடர் மரங்களின் ஊடே*
*ஓடும் நல் நதி நீர் நடுவே*
*பூத்த புது மலரெனக் கண்ட*
*புத்தனின் தாள் பணிந்தேன்*
*நலமுடை வாழ்வு தந்தான்*
*நம்பிக்கை தானும் தந்தான்*
*உடல் நலம் பேணச் சொன்னான்*
*நித்தம் தவமெனும் யோகம்*
*செய்யும் வெண்ணிறப் புத்தன்*
*எனைப் பார்த்து இன்னும்*
*ஏன் புன்னகை செய்தான்!!*


❍


*உனக்கெனவும் எனக்கெனவும்*
*காத்திருப்பதில்லை..*
*யாருக்காகவும் யாருக்கெனவும்*
*காத்திருப்பதில்லை....*
*எவருக்கெனவும் நின்றுவிடப்*
*போவதில்லை காலம் என*
*என்னிடத்தில் என் புத்தன்*
*உரைத்த வண்ணமிருக்கிறான்*
*இதோ என் முன்னே காலம்*
*நகர்ந்தவண்ணமிருக்கிறது ...*

❍

*புறச் சத்தங்கள் ஏதுமில்லா*
*மௌன தவத்தில் உள்ளிருந்து*
*வெளி வீழும் பேரருவி நிசப்தமாய் ...*
*இதோ இன்னுமோர் புத்தன் ..*

❍





உலகு முழுதும்
நிரம்பிக் கிடக்கிறது
ஓம் எனும் ஒலி...
விரிந்த மஹா மந்திர
ஒலி வடிவை முழுக்க
உள்ளிழுத்து சூன்ய
நிலை தாண்டி சுடர்
விடத் தொடங்கிய
பிரம்மா ஞானம்
சற்றே பிடிபடத்
தொடங்கிய நிலையில்
போதி மரத்தடி புத்தன்
என நானும் ....

❍

என் கண்ணைவிட்டகலாது
பூட்ட முடியாக் கோட்டைக்குள்
விஸ்வ ரூப தரிசனத்தில்
மிளிர்கிறான் என் புத்தன் ...
இத்தனை உயரக் கோட்டைக்குள்
இருப்பவனை எங்ஙனம்
என் மனக் கோட்டைக்குள்
கொண்டு சேர்க்க.....

❍

பற்றறு எனச் சொன்ன
புத்தனைப் பற்றினேன்
எனைப்பற்றிய பற்றெல்லாம்
பற்றற்றுப் போயின ...
அற்ற பற்றெல்லாம் எனைப்
பின் தொடராதிருக்க அவன்
விரல் பற்றிச் செல்கின்றேன் .
சூட்சும உலகத்தில் எனக்குச்
சொந்தமென யாருமில்லை
பந்தங்கள் தொலைந்திட்ட
மாதவத்தில் நானும் ஓர்
புத்தன் என மாறிக் கிடக்கின்றேன் ,,,,
இப்போதும் புன்னகைத்தபடி
எனை ஏன் பார்க்கிறான் இப் புத்தன் ...

❍

அதிகாலை விழித்தெழுந்தேன்
நட்ட நடுவாசல் வழி தெரிந்த
வானம் பார்த்தேன் ..
ஓங்கி உலகளந்த
புத்தன் தெரிந்தான் ..
தினம் தோறும் தவம்
செய்தென்ன பலன் கண்டாய்
பெரும் புத்தா எனக் கேட்டேன் .
ஒன்றுமில்லை எனச் சொன்னான் ..
ஆம் இப்போது அவனிடத்தில்
கோபமில்லை பதட்டமில்லை
மன அழுத்தம் கொஞ்சமும் இல்லை
மூப்பின் அடையாளம் தருகின்ற
பயமுமில்லை எப்போதும்
மரண பயம் இல்லாத ஓர் பெரு
வாழ்வு பெற்றவனாய் என் கண்
முன்னே உயர்ந்தோங்கி நின்ற புத்தன்
இன்னும் எனைப் பார்த்து ஏன்
புன்னகை சிந்துகிறான்!!!!!!!!!!!

❍

அடர் பெருவனத்தின்
நிறைந்த மரங்களினூடே
நட்ட நடு இடத்தில் வீற்றிருந்த
புத்தனை நான்
திரிந்தலைந்து தேடிக்
கொண்டிருந்தேன்...
நெருங்க நெருங்க எனை
உள்ளிழுத்துக் கொண்ட
காந்தமென விஸ்வரூப புத்தன்
ஓங்கி உலகளந்தபின்னும்
இன்னும் ஏன் புன்னகைக்கிறான்
எனைப் பார்த்து...

**நந்தவனம் சந்திரசேகரன், திருச்சி, தமிழ்நாடு**

# என்னைத்தேடி .....



என்னைத் தேடியலையும் போதெல்லாம்
நீ கிடைத்து விடுகிறாய்

செங்காந்தல் மலர்களிடம்
ரகசியம் சொல்ல
காத்திருக்கும் போதெல்லாம்
நீ வெக்கத்தை சூடிக்கொள்கிறாய்

கனவில் கடவுளிடம்
சொர்க்கத்தைக் கேட்டேன்
கண்விழித்த போது
உன்னை அனுப்பியிருந்தார்

அளவற்ற மகிழ்ச்சியும் நீ தான்
அழுகையைத் தரும் சோகமும் நீ தான்

ஒற்றைச் சொல்லுக்காக
நான் காத்துக்கிடக்கும் போது
நீ புன்னகையாலேயே
அயிரம் கவிதைகளை சிந்தி விடுகிறாய்

இன்னும் கூட என்னைத்
தேடிக் கொண்டேதான் இருக்கிறேன்
நீ எனக்குப் பிடித்த பாடலை
கேட்டுக் கொண்டிருக்கலாம் அல்லது
எனக்கான ஒரு கவிதையை
எழுத முயற்சிக்கலாம்

சரி எப்போது
நீ வேறாய் நான் வேறாய் இருந்தோம்?



லக்ஷ்மி

அவனை அரைக்கிறுக்கன் என்கிறார்கள்

அழுக்கான உடைகளைப் பற்றி அவன்
கவலைப்படுவதில்லை

காய்ந்து அடந்து வளர்ந்துள்ள தலைமுடி அவனை
தொந்தரவு செய்ததில்லை

சாலையில் செல்லும் அழகான பெண்கள் அவனை
சலனப்படுத்தியதில்லை

நிலவைப் பார்த்து வெட்கப்படுகிறான்

பூக்களைத் தொட்டு ரசிக்கின்றான்

மழையில் நனைந்து சிரிக்கின்றான்

மரங்களைக் கட்டியணைத்து கதை பேசுகிறான்

எங்கேனும் கேட்கும் பாடல்களில் லயிக்கின்றான்

அவனை அரைக்கிறுக்கன் என்னும்
சமூகத்தின் புண்கள் இன்னும் ஆறவில்லை

யாருக்காகவோ விளையாடும் மட்டைப்பந்தில்
ஊறி வரிசையில் காத்துகிடக்கின்றது.

பா.சிவகுமார்

# வேடம்

மீஅழுத்தத்தை குறைக்க
மாறுதலுக்காக
மாறுவேடப் போட்டி
கடவுள்களுக்கிடையே...

மயிலிறகைச் சூடி
புல்லாங்குழலை வாசித்தவாறு
ஆடுகளை மேய்க்கிறார் இயேசு
சிலுவையும் முட் கிரீடமும்
சுமந்தவாறு கிருஷ்ணன்
நவீன ஆடையணிந்து
நடையிடுகிறார் மகாவீரர்
அரச கோலத்தில்
மிளிர்கிறார் புத்தர்
பர்தா அணிந்து
பசுவிற்கு
தீவனம் தருகிறார்
மேரி மாதா...
கைதட்டி ஆரவாரம்
செய்கிறார்கள்
பார்வையாளராக
அமர்ந்திருக்கும் பிற கடவுள்கள்

அதே கணம்...
உயர்நீதிமன்றத்தில்
வழக்கு தாக்கல்
அக்பர் சீதா பெயரிட்ட
சிங்கங்களை
ஒரே கூண்டில் அடைக்க
கண்டனம் தெரிவித்து.

கவிஞர் மல்லை.மு இராமநாதன்.

# கோடுகளை எழுத்தாக்கும் கொள்கை விரல்கள்



ஆ" சிறியர் இவரென அவனியிலே வாழாது
ஆசிரியர் யாமென அவையிலே வாழ்ந்திடுக
கோடுகளை எழுத்தாக்கும் கொள்கை விரல்களே
கேடுகளை களையெடுக்கும் கேண்மையாளர்களே

வீடுகளை விட்டு வரா மாணாக்கர்கள்
ஏடுகளை எடுத்து வந்து கல்வி கற்க
நீங்கள் படும்
பாடுகளை பார்த்து பாராட்டுகின்ற
நன்னாள் இந்நாள் நாடு புகழ் திருநாள்
என்னால் இயலுமென இஸ்ரோ வீரர்களாய்
இந்நாள் மாணவர்கள் துணிவு பெறல்
சொன்னால் மிகையேது சொற்போர் வீரர்களே
கண்ணாம் கல்வி தரும் குருக்களே நீ வீரன்றோ

---


இரா. வெங்கடேஸ் குமார்



மண்ணினத்தில் பூத்த உணர்வு ஒன்று
மகுடமாய் நிற்குதே உயிரினத்தில் நிலை நின்று
மற்ற உணர்வெல்லாம் தோன்ற காரணம் உண்டு
மழை போலே எதிர்பாரா குணம் காதலுக்கு நன்று
மடை போல பொங்கி வரும் உணர்வுகளின்
இடையில்
மழலை போல தூய சாந்தம் காதலின் நடையில்
மனம் வேண்டும் நல்ல குணம் வேண்டும் எனில்
மாறாத காதல் வேண்டும் இதயம் தன்னில்
மனம் மட்டும் வேண்டி நிற்கும் வெகுளித்தனம்
மற்றவர் நலன் கருதும் சுத்த வெள்ளை மனம்
மண் தோன்றும் போதே உடன் தோன்றிய மழலை
மணம்..

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# அடைமழையில் நனைந்திடலாம் அருவிதனை இரசித்திடலாம்



அடைமழையில் நனைந்திடலாம்
அருவிதனை இரசித்திடலாம்
அழகிய விடியலை
அதிகாலை கண்டிடலாம்

ஆகாய கங்கையில்
ஆத்மார்த்தமாக குளித்திடலாம்
ஆதவனின் கதிர்கள்
ஆன்மாவில் படர்ந்திடலாம்..

தடைகளில்லா ஓட்டங்களில்
தசைகள் தாண்டிடலாம்
தங்கு தடையின்றி
தண்மையை தேடிடலாம்..

மேகக் கூட்டங்களிடையே
மேன்மையாகப் பறந்திடலாம்
மேலாண்மை பராமரிப்போடே
வேளாண்மை செய்திடலாம்...

அருவியில் மேலேறி
அருமையாக குதிக்கலாம்
அன்னப் பறவையாக
அருஞ்சுவை பிரிக்கலாம்...

சாரலின் மென்மையை
சாளரத்திலே உணரலாம்
சாகசங்களை செய்தே
சாதனையாளர்கள் ஆகலாம்...

மெல்லிய பூங்கொடியில்
மென்மையான பூக்களை
மேன்மையாய் உருவாக்கலாம்
மேதினியில் மோகனமாகலாம்....


அந்தி வானம்
அந்தரத்தில் சிவக்கலாம்
அருங்காட்சிகள் பல
அருமையாக ருசிக்கலாம்...

ஆதவனின் உக்கிர
ஆளுகையின் வேளையில்
ஆக்கப்பூர்வமான தண்ணீர்
ஆதர்சமான பந்தல்கள்

ஆலயங்களில் கொணரலாம்
ஆண்டவனாய் உணரலாம்..
ஆண்டவர்கள் கண்முன்னே
ஆதர்ச மன்னர்களாகலாம்

பூமிப்பந்தின் கரையில்
பூரிப்பாய் சுற்றலாம்
பூக்களின் அழகியலின்
பூபாளம் பாடலாம்....

மின்னலின் பின்னலென
மினுமினுத்தே சொலிக்கலாம்
தடையில்லா இயற்கையின்பம்
தரணியிலே பெற்றிடலாம்....




# அலாரம்

## ரகுநாத் வ (மதுரை)

"கடிகாரம் போல வேகமாக ஓடிகொண்டிருப்பவர்களுக்கு அதன் வேகத்திற்கான அளவினைக் கணக்கிட நேரமிருக்காது. அதுபோலவே தனது வாழ்க்கை என்னும் ஓட்டத்தில் ராம் தனது பாதையின் செல்ல வேண்டிய தூரம் மட்டுமே அவன் கண்களுக்குப் புலனாக ஒரு நொடி மன நிறுத்தியினை அழுத்தி வாழ்வின் சாராம்சம் உணரலாகிறான்"

ராம் சிறுவயதிலிருந்தே முதல்நிலைத்தேர்வில் தேர்ச்சி அடைந்து குரூப் ஒன்று அதிகாரியாக வரவேண்டும் என்ற எண்ணத்தோடு படித்துக்கொண்டிருப்பவன். இரண்டு வருடங்களாக கடின முயற்சி செய்து தற்போது முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளான். அடுத்ததாக மெயின்ஸ்.

விஜயனும் ராமுவும் பால்யகால நண்பர்கள். இருவருக்கும் ஒரே விதமான குறிக்கோள்கள். அருகருகே அடுத்தடுத்த வீடுகளில் வசிப்பவர்கள். இருவரது தந்தைகளும் தேனி அருகிலுள்ள அண்ணா கூட்டுறவு நூற்பாலையில் ஒன்றாக பணிபுரிவது உள்ளிட்ட ஒன்றுபட்ட காரணிகள் இருவருக்கும் ஒரேவித குறிக்கோள்கள் வர அடிப்படையாகிவிட்டது. முதல் நிலை அதிகாரிகளாக்குவது என பால்ய வயதிலிருந்தே ஊட்டமிடப்பட்டு வளர்க்கப்பட்ட விஜயன் எதற்கும் அஞ்சாதவன், ராம் எளிதில் உடையக்கூடிய மனம் படைத்தவன். இவை அவர்களது வாழ்வியலிலும் பிரதிபலித்தன.

எங்கு எதற்காக ஓடிக்கொண்டிருக்கிறோம் என்பதை உணர ராமிற்கு சில நொடிகள் ஆனது. ஏதோ ஓர் அவசரம் என்பது மட்டும் உள்ளூரத் தெரிகிறது. தனக்குத் தானே இன்று முதனிலை எழுத்துத் தேர்வு நேரம் ஒன்பது முப்பதாகிவிட்டது, இன்னும் அரைமணி நேரத்திற்குள் முப்பது கி.மீ கடக்க வேண்டும், எனக்கூறியவாறு நேரத்திற்கு கொண்டுவந்து சேர்க்க வேண்டிய பாண்டியன் காலை வாரிவிட்டதால் இந்தப் பொழுதில் இங்கு ஓடிக்கொண்டிருக்கிறோம் என்பது அவனுக்குப் புரிபடுவதற்கும், சட்டென முழிப்பு தட்டி விழிப்பதற்கும் சரியாக இருந்தது.

நேரம் நள்ளிரவு 2.24, ச்சே... கனவா என்றவன், அலாரம் அடிக்க இன்னும் இரண்டு நேரம் இருக்கிறது என ஊர்ஜிதப்படுத்திக்கொள்ள, அவன் மனதிற்குள் சிறு குழப்பம், எழுத்துத் தேர்வு இம்முறை மதுரையில்தானே பிறகு எதற்கு தொடர்வண்டியில் சென்னை செல்வதாய் கனவென குழப்பத்தோடே படுக்கையை விட்டு எழுந்தவன் முதனிலைத் தேர்விற்கு கிளம்பத் தயாராகிறான்.

அன்று காலை முதலே விஜயன் அவனது கண்களில் படவில்லை. பக்கத்தே வீடென்றாலும் விஜயன் பெரிதும் தனிமை விரும்பி. தேர்விற்கு சேர்ந்து போகலாம் என்பது இருவரும் பேசியெடுத்த முடிவு, இருப்பினும் ராமிற்கு முன்னதாகவே விஜயன் கிளம்பிச் சென்றிருந்தான்.

காலையில் தேர்வுக்கூடம் சென்று திரும்பிய ராம், விஜயனிடம் "எப்படிடா எழுதுன?" என வினவ. ராமிடம் விஜயன் சூப்படா, நல்லா எழுதியிருக்கேன், "ஆனா, பத்து மார்க்ல ஒன்னு மட்டுமா விட்டுட்டேன்டா," டைம் பத்தல, நீயென ராமிடம் விஜயன் வினவ... எல்லா கேள்விகளுக்கும் பதில் எழுதிட்டேன்டா, எல்லாமே நாம படிச்ச கேள்விகள்தானடா என மகிழ்ச்சி பொங்கக் கூறினான்.

'தேதிகள் வாழ்க்கையில் மிக எளிதாகவே ஓடிவிடுகின்றன,'

ஒரு வாரம் கழித்து, விஜயன் செய்தித்தாளோடு ராமிடம் அழுத முகத்தோடு ஓடி வந்து "டேய் மாப்ள பாத்தியாடா நம்மள ஏமாத்திட்டாங்கடா," என்றதும் அழுதுவீங்கிய முகத்தோடு ராமும் ஆமாண்டா, நம்மள ஏமாத்திட்டாங்க, நல்லா எழுதுன எக்ஸாம்டா இந்தத் தடவ கண்டிப்பா ரிசல்ட் வந்துரும்னு நம்புனேன்டா, யாரோ ஒருத்தன் பண்ற தப்புனால நம்ம எல்லோராட எதிர்காலமும் பாதிக்கப்படுதுடா என புலம்பினான்.

அந்த முதல்நிலைத் தேர்வின் வினாக்கள் ஏற்கனவே வெளியில் கசிந்ததால் அன்று நடைபெற்ற தேர்வு ரத்தென்கிற செய்தி அவர்களின் வாழ்வில் பெரிய பாதிப்பினை ஏற்படுத்த அடுத்த நாள் காலையில் விஜயன் வீட்டு வாசலில் ஒரே கூட்டம்...

விஜயனைக் காண அங்கு சென்ற ராம் 'என்ன ஆச்சு?!' ஏன் ஒரே கூட்டமா இருக்காங்க விஜயனோட அப்பாவிற்கு உடம்பு முடியாம இருந்தாரே ஒருவேளை அவருக்கு எதுவும் ஆயிருச்சா என மனதில் நினைத்தவாறே வாசற்படிக்கட்டுகளில் காலை வைத்ததும்...


"அட படுபாவி இப்படி எங்க எல்லோர் தலையிலயும் இடியை போட்டுட்டு போய்டியேடா...." என்ற ஓலம் அவனது காதுகளை இடிக்க கேட்க தலையைக் கவிந்து சாளரத்தின் வழியே வீட்டினுள் பார்த்தவனுக்கு பெரும் அதிர்ச்சி அவன் கண்கள் குளமாகின, வார்த்தைகள் தளதளத்தது, அவனால் அந்த காட்சியை முழுதாக ஏற்க இயலவில்லை, விஜயனின் கால்கள் உத்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தது, கைகளில் தேர்வு ரத்தானது என்கிற செய்தித்தாள்.

நிலைகுலைந்துபோன ராம், விஜயாவெனக் கத்தியவாறே, சடாரென எழுகிறான்.

மணி அதிகாலை 4.23 அலாரம் அடிக்க இன்னும் ஒரு நிமிடம் இருக்கிறது. பயத்தில் வியர்த்தவாறு கைப்பேசியினை ராம் துழாவ, விஜயனிடம் இருந்து நள்ளிரவில் மூன்று மிஸ்டுகால்கள் வந்திருந்திருக்கின்றன, விறுவிறுவென கோச் S6 நோக்கி விரைய அங்கு அப்பர் பெர்த்தில் விஜயன் உறங்கிக் கொண்டிருக்கிறான்.

'டேய், விஜயா எழுந்திரிடா இன்னைக்கு நமக்கு இன்டர்வியூ, செகண்ட் டைம் மெயின்ஸ் எழுதி இன்டர்வியூ போயிட்டிருக்கோம்' இன்னும் என்னடா உனக்கு தூக்கம் வேண்டிருக்கு எந்திரிடா என அடித்து எழுப்ப...

கண்களைக் கசக்கியவாறே தொடர்வண்டிச் சாளரம் வழியே விஜயன் எட்டிப்பார்க்க, பாண்டியன் எக்ஸ்பிரஸ் செங்கல்பட்டினைக் கடந்து கொண்டிருக்கிறது.



# கலைந்து போகும் கோலங்கள்

கமலினி கதிர், சுவிற்சர்லாந்து

பூம்பனி கொட்டிக் கொட்டி ஓய்ந்துவிட்டது குளிரும் இருளும் சுவிசில் தங்கள் ஆட்சியை முடித்துக்கொண்டு வேறு ஏதோ நாட்டுக்கு பயணித்துவிட்டன.ஆட்சி மாற்றம் தொடர மழை தனக்குரிய தொழிலை ஆரம்பித்தது.தூறுவதும்,விட்டுவிட்டுப் பெய்வதுமாக இயற்கை அடுத்த கட்டத்திற்கு மெதுவாக நகர்ந்தபடி இருந்தது.இலைகளை உதிர்த்து விட்டிருந்த செடிகளும்,மரங்களும் தாம் துளிர்ப்பதற்கு குளிர்நீருக்காக காத்திருந்த வேளையில் பெய்கின்ற மழையை வரவேற்றன.

ஸ்போட்ஸ் ஃபேரியன்(மாசி மாதத்தில் வரும் விளையாட்டு விடுமுறை) தொடங்கவும் இரண்டு வாரங்கள் பிள்ளைகள் வீட்டில் நிற்பதால் சிறுவர்கள் வைத்திருக்கும் பெற்றோருக்கு அது ஒரு மனஅழுத்தத்தை கொடுப்பதாக இருக்கும்.சிறுவர்களை வைத்திருப்பவர்கள் கின்டர்ஹோர் ட்டில(சிறுவர் பராமரிப்பு நிலையம); விடுவதும் அல்லது பெற்றோரில் ஒருவர் விடுமுறை எடுப்பதும் வழக்கம்.சிலர் குடும்பமாக சுற்றுலா செல்வதுமுண்டு.லதாவின் கணவன் சமீபகாலமாக குணம் மாறியதால் அவளும் பிள்ளைகளும் பெரிதுமே பாதிக்கப்பட்டிருந்தார்கள்.தகப்பன் தாய்க்குள் ஏற்பட்ட பிரச்சனைகள் பதினாறு வயதான இலக்கியாவைப் பெரிதும் பாதித்தன.நான்கே வயதான மகன் இலக்கியன் கூட எதுவுமே புரியாமல் ஆனால் பாதிக்கப்பட்டு ஒன்றுமில்லாததற்கு அழுவதும், விளையாடாமல் ஒரிடத்தில் உட்கார்ந்திருப்பதும்,சாமான்களைத் தூக்கி எறிவதும்,ஹோர்டுக்கு போக மாட்டேன் என்று அடம் பிடிப்பதும் வழக்க மாய் விட்டது.சொல்லத் தெரியாத வேதனை அந்தக் குழந்தையின் ஆழ் மனதை போட்டு பாடாய் படுத்துவது தாய்க்குத் தெரிந்தும் அதை மாற்ற வழி தெரியாமல் தவித்தாள்.நாளும் ஏதோ ஒரு விடயத்திற்காக சண்டையைத் தொடங்கி எல்லோரின் நிம்மதியையும் காவு கொள்ளும் கணவனிடமிருந்து பிள்ளைகளின் எதிர்காலத்தை எப்படி பாதுகாப்பது என்றுதான் லதாவிற்கு புரியவில்லை.

அப்பா,அம்மா பிரச்சனைப்பட்டால் நடுவில் பிள்ளைகள் பாதிக்கப்படு வதை லதா பல இடங்களில் கண்டிருக்கிறாள்.அவளது அக்காவின் நண்பியின் கணவன் கனடாவில் குடிக்கும்,போதைக்கும் அடிமையாகிச் சீரழியும்போது தாங்கிக் கொண்டிருந்ததனால் இரண்டு ஆண்பிள்ளை களும் எதுவும் செய்யத் தைரியமில்லாமல்,படிப்பிலும் பின்தங்கி இன் னும் சிரமப்படுவதைக் கண்டிருக்கிறாள்.அதைப்போல் கோபத்திற்குச் சொந்தக்காரனான தன் கணவனால் பிள்ளைகள் வாழ்வு எப்படியாகப் போகிறதோ என்று தவித்தாள் லதா.வாக்குவாதங்கள் ஏற்படும் நேரங்க ளில் லதா தான் முன்பு கேள்வியே படாத வார்த்தைகள் எல்லாம் இப்போது தனது படுக்கையறையில் உட்கார்ந்து கும்மியடிப்பதைப் பார்க்கும் போது அவள் நெஞ்சு நடுங்குவதை உணர்கின்றாள்.அவன் வாயிலிருந்து எந்தவித கட்டுப்பாடுமில்லாமல் சுதந்திரமாக கெட்ட வார்த்தைகள் துள்ளிக் குதித்து எதிரில் இருப்பவரைக் காயப்படுத்திக் குப்புற வீழ்த்தும்.அந்த நேரங்களில் அந்த வார்த்தைகள் பிள்ளைக ளின் காதுகளில் விழுந்து விடக் கூடாதேயென்று லதா தவிக்கும் தவிப்பு கொஞ்சமில்லை.அதற்காகவே அவள் அந்த இடத்தை விட்டு விலகினால் தன் குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்டு மறுக்காதிருக்கி றாள் என்று புது அர்த்தம் கற்பித்துவிடுவான்.அவன் வீசி விட்டுச் சென்ற வார்த்தைகள் விடாப்பிடியாய் லதாவின் மனதில் உட்கார்ந்து விறாண்டிக்கொண்டு நித்திரையைக் காவு கொண்ட நாட்களே அதிகம். பெண்ணைக் காயப்படுத்த ஆண் எடுக்கும் ஆயுதம் அவள் நடத்தை யைத் தப்பாக பேசுவது என்று தெரிந்தும் தனக்கு ஏற்படும்போது அவளுக்கு வலித்தது. வலிமையான பெண்ணை எங்கே தொட்டால் நொருங்கிப் போவார்களோ அதைத் தொடுவது ஆண்களின் மனநிலை யென்று எங்கோ படித்தது லதாவுக்கு நினைவுக்கு வரும்.

விபரிக்க முடியாத சோகங்கள் அள்ளி வீசப்பட்டிருக்கும் அந்த வீடு கெட்ட அதிர்வுகளை மட்டுமே தன்னகத்தே கொண்டு அவற்றையே எங்கும் பிரதிபலித்துக் கொண்டிருந்தன.லதா தன்னுடைய வாழ்வில் தானும் நிம்மதியைத் தொலைத்து பிள்ளைகளையும் நிம்மதி இழக்கச் செய்து கொண்டிருந்தாள்.இலக்கியன் பிடிவாதம் செய்யும் நேரங்களில் அவனைக் கடிந்து கொள்வதுடன் கோபம் அத்துமீறி சில நேரங்களில் அடித்துவிட்டு மறு நொடியே வேதனைப்படுவதும் அடிக்கடி நிகழ்ந்து விடுகிறது.தேவையில்லாமல் தண்டிக்கப்படும் குழந்தையின் கற்கும் திறன் பாதிப்படையும் என்ற உண்மை தெரிந்தும் கோபத்தை அடக்க முடியாமல் சிரமப்பட்டாள்.இதனால் மகனின் மன ஆரோக்கியம் குறை ந்து தவறான வழியில் போக வழி வகுக்குமென்ற உளவியல் தெரிந் தும் அவனைக் கையாளத் தெரியாமல் தடுமாறினாள். அதுவும் ஆண் குழந்தை திசை மாறுவது எளிது என்பது அடிக்கடி வந்து பயமுறுத் தும்.தான் அடங்கிப் போவதைப் பார்க்கும் பிள்ளைகள் தைரியமில்லா தவர்களாக தன்னம்பிக்கை இல்லாதவர்களாக வந்து விடுவார்களென் பது அவளுக்குத் தெரிந்தேயிருந்தும் யாரிடமோ ஏற்படுகின்ற கோபத் தை பிள்ளைகளிடமே காட்டினாள.;

லதா நெருக்கமான தோழிகளுடனும் மனம் திறக்க சங்கடப்பட்டுக் கொண்டு தனக்குள்ளேயே குமைந்து கொண்டிருந்தாள்.குடும்பப் பிரச்ச னைகளை மற்றவர்களுடன் எப்படிப் பகிர்வது என்ற தயக்கத்திலிருந்து அவளால் மீள முடியவில்லை.கணவன் மனைவி பிரச்சனை நான்கு சுவர்களைத் தாண்டக் கூடாது என்று இளம்வயதில் மூளையில் ஏற்றி விட்டதை இறக்கி

வைக்க அவளால் முடியவில்லை. கணவனின் நல்ல தல்லாத குணங்களை மற்றவர்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்ட பிடிக்காமலிருந்ததால் மனஉளைச்சலுக்கு ஆளானாள்.ஒரு குடும்பத்தில் ஆண் சரியாக இருக்காத பட்சத்தில் பலரிடம் தன் சுயமரியாதையை இழக்க வேண்டி வருமென்ற உண்மை கசந்தது.மனதிற்குள் அழுத்தி வைக்கும் துயரங்கள் அடிக்கடி அழுகையாக வெடிக்கும்.கண்ணீர் பெருகிப் பெருகி அவை ஒரு கட்டத்தில் நிற்கும்போது கண்ணீர் வற்றி விட்டதோ என்று ஐயப்படுவாள்.

பிரச்சனைகளுக்குள் மட்டுமே தன்னைத் திணித்துக் கொண்ட லதாவு க்கு தன்னைச் சுற்றி என்ன நடக்கிறதென்றே விளங்கவில்லை.பல இரவுகளில் கணவன் வீட்டுக்கு வராதிருப்பது புரிந்தாலும் அவனைத் திருத்த அவளால் இயலவில்லை.கேட்டாலும் தகுந்த பதில் வராததால் அவளுக்கு மன உளைச்சலே ஏற்பட்டது. தன் பிரச்சனையே பெரிதாக இருந்ததில் பிள்ளைகளின் கவலைகள் அவளுக்குப் பெரிதாக தெரிய வில்லை. அவ்வப்போது அவற்றைப் புரிந்து கொண்டாலும் தன் பிரச்ச னைகளைத் தீர்;த்துவிட்டுப் பார்க்கலாம் என்று ஒவ்வொரு நாளும் தள்ளிப் போட்டுக்கொண்டே வந்தாள்.வீட்டு வேலையுடன்,பொருட்கள் வாங்குவது மட்டுமே அவள் வேலையில்லை.லதா வேலைக்குப் போகாமல் இருந்தால் வீட்டுச்செலவுகளை சமாளிப்பது சிரமம் என்று கூறும் கணவன் வீட்டுவேலைகளில் பங்கேற்பதேயில்லை.கேட்டாலும் பேசாமல் கடந்து போகும் கணவனுடன் கத்தினாலும் நோகப் பேசும் கணவனுடன் வாக்குவாதத்தில்தான் முடியும்.கூட வாழ்பவளை ஒரு பொருட்டாகவே மதிக்காமல் வீட்டில் இருக்கும் ஒரு பொருளாக பார்க்கும் கணவன் அவளுக்கு எப்போதுமே ஸ்ரெசை மட்டுமே கொடுப்பவனாகவே இருந்தான்.இரண்டு பேரும் உழைத்தாலும் பணப்பிரச்சனை இருந்து கொண்டேயிருந்தது.ஊரிலிருக்கும் அவன் பெற்றோர் ஏதோ காரணங்கள் சொல்லிப் பணம் பறிப்பதிலேயே குறியாக இருந்தார்கள்.லதாவின் பக்கத்தில் யாரும் அவளிடம் பணம் வாங்கும் நிலையில் இல்லை.

வேலையிலிருந்தாலும் மனம் சதா கணவனைப் பற்றியே சிந்தித்தது. பிள்ளைகளின் எதிர்காலம் கண்முன்னே பூச்சாண்டி காட்டிக்கொண்டு இருந்தது. தான் எடுக்கும் முடிவில் தான் பிள்ளைகளின் வளமான எதிர் காலம் இருப்பது அவளுக்குப் புரிந்தாலும் பிரிந்து செல்வது என்ற முடிவை எடுப்பதில் காலம் தாழ்த்துவதிலேயே கழிந்தது.அன்று பள்ளியால் வந்த இலக்கியா அறைக்குள்ளேயே அடைபட்டிருந்தாள். தான் வேலையால் வந்தவுடன் அறையை விட்டு வெளியே வரும் இலக்கியா இன்று வெளியே வராதது உறைக்க அறைக்குள் சென் றாள்.படிக்கும் மேசையில் தலை வைத்து கதிரையில் உட்கார்ந்தி ருந்தாள் இலக்கியா.விசும்பும் சத்தம் கேட்கவே பதட்டத்துடன் அருகில் சென்று தலை கோதி 'என்னம்மா என்ன நடந்தது' பரிவுடன் கேட்கவும் சொற்கள் வெளியே வராமல் மௌனம் காக்க கண்களிலி ருந்து கண்ணீர் பொழிய'அம்மா!'என்று வெடித்துக் கொண்டு அழுதாள். பரீட்சையில் நான் நல்ல புள்ளிகள் எடுக்கவில்லை. லேரேயும் செய்ய முடியாது போல இருக்கம்மா.நான் என்ன செய்ய?' வழியும் அவளது கண்ணீரைத் துடைத்துவிட்டபடி'பிள்ளை எவ்வளவு கெட்டிக்காரி. எல்லாம் எங்கடை பிரச்சனைகளால் தான் இப்படியாகுது.பரவாயில்லை. யோசிப்பம்.இந்த நாடுகளிலை ஏதோவொரு படிப்பு படிக்கலாம்.எத்த னையோ வழிகள் இங்கையிருக்கு.பத்தாம் வகுப்பு படித்து பெரூவ் சூளையில்(வேலையுடன் கூடிய படிப்பு) சேரலாம்.பல சங்கடங்களைக் கடந்தவர்களே சாதனையாளராக வந்திருக்கிறார்கள்.ஒரு தோல்வி ஒருவர் வாழ்வை நிர்ணயிப்பதில்லை.மனதைத் தளர விட வேண்டாம்' அம்மாவின் பரிவு தென்பைத் தந்தாலும் சொல்லாமல் மனதிற்குள் புதையுண்டிருக்கும் இன்னொரு விடயம் அம்மாவுக்கு மறைப்பது இலக்கியாவுக்கு நெருடலாகவே இருந்தது.நெடுகலுமே அழும் அம்மா இந்த விடயத்தை கேட்டால் என்னாவாவோ என்று அந்தச் சிறுமி பயப்படுவது அவள் வயதுக்கு அதிகமாகவே இருந்தது. மகளுக்கு ஆறுதல் கூறினாலும் அவள் எதிர்காலம் இருண்டு விடுமோ படித்து நல்ல நிலைமைக்கு வர முடியாமல் போய்விடுமோ என்ற கவலை லதாவைப் பற்றிக்கொண்டது.

அம்மாவுக்கு மறைக்கும் விடயம் தெரிந்தால் அம்மா உடைந்துபோய் விடுவா என்றது மட்டுமே இலக்கியாவால் நினைக்க முடிந்தது. இலக்கி யாவின் பள்ளியில் ஏழாம் வகுப்பு படிக்கும் சாருகா இப்ப கொஞ்ச நாளாய் தன்னைப் பார்த்து சினேகமாக சிரிப்பதும் தன்னோடு பேசுவ தற்கு முயற்சிப்பதும் ஏனென்றுதான் இலக்கியாவுக்கு புரியவில்லை. ஒருநாள் புரிந்தபோது அதிர்ந்து விட்டாள்.'அப்பாவோடு நேற்று சினிமா வுக்குப் போனோம்.நீங்க அப்பாவோடு போறதில்லையா?'அப்படி அவள் கேட்கவும் அவர் கூட்டிப்போவதில்லை என்பதை ஒப்புக் கொள்ள விருப்பமில்லாமல் 'போவமே'ஒற்றை வார்த்தையில் கதையை முடித்து விட்டாள்.சாருகாவின் அப்பா ஆறு மாதத்திற்கு முதல் இறந்து விட்ட தாக அறிந்திருந்த இலக்கியா சாருகாவுடன் பேசுவதை விட்டுவிட வேண்டுமென்று நினைத்தாள்.அடுத்தடுத்த நாளும் வந்து கதைத்தாள். 'எனக்கு உம்மோடை அவ்வளவு பழக்கமில்லை. ஏன் வந்து வந்து கதைக்கிறீர்?'இலக்கியா கேட்கவும் வந்த பதிலில் அதிர்ந்து போய் விட்டாள்.'உங்கடை அப்பா தான் என்ரை அப்பாவும்.அப்ப நாங்க அக்;கா தங்கச்சிதானே''என்ன சொல்றீர்?''ஓம்;.அவர் ஒவ்வொரு நாளும் எங்கடை வீட்டை வாறது உங்களுக்குத் தெரியாதா?அவர்தான் எங்க ளுக்கு சாமானெல்லாம்

வாங்கித் தாறது.என்ரை அப்பா செத்தபிறகு இவர்தான் என்ரை அப்பா' நெஞ்சை அடைப்பதுபோல் மூச்சு முட்டியது இலக்கியாவுக்கு.

இதை அம்மாவிடம் சொல்ல முடியாமல் இலக்கியா தவித்துக் கடைசி யில்'அம்மா!சுரேகா வீட்டுக்கு அப்பா ஒவ்வொருநாளும் போறவராம். அவர் தான் தனக்கும் அப்பா என்று சொல்றா'சொல்லி முடிக்குமுன்பே லதா விக்கித்துப் போனாள்.இப்போ ஒவ்வொன்றாக விளங்கியது.தன்னு டைய நண்பன் இறந்ததால் அவன் மனைவி தனியவே கஷ்டப்படுவதா கவும் பென்ஷன் விடயமாக சில வேளைகளில் அந்த வீட்டுக்குப் போவதாகவும் கணவன் சொன்னது இப்போது கொஞ்சம் கொஞ்சமாகப் புரியத் தொடங்கியது.சமீபகாலமாக கணவன் தங்களுடன் சதா கோபிப் பதும்,வெறுப்பைக் கக்குவதும் இதனால்தான் என்பது நெற்றிப்பொட்டில் அடித்தது போல் புரிந்தது.தாங்களாகவே பிரிந்து போகட்டும் என்றுதான் இப்படியெல்லாம் சண்டை பிடிக்கிறார் என்பது உறைக்க உறைந்து போனவள் தான் முடிவெடுக்க வேண்டிய காலம் நெருங்கி விட்டதை தெளிவாக உணர்ந்தாள்.

கணவன் மனைவியை விட்டு இன்னொரு பெண்ணுடன் தொடர்பிலிருப் பது,பிள்ளைகளைக் கவனிக்காமல் இருப்பது போன்ற செய்திகளைப் பத்திரிகைகளில் படித்தது இப்போது தன் வீட்டைத் தட்டி நடக்கும் போது தான் அதன் வலி புரிந்தது.அடுத்த வீட்டில் நடக்கும் போது வெறும் செய்தியாகக் கடந்தது இப்போது புண்ணாக வலித்தது.இரண்டு மூன்று நாட்கள் தலை வலிக்க வலிக்க யோசித்தாள.;சுயமரியாதை இழந்து எதையும் அடையவேண்டுமென்று எந்த அவசியமுமம் இல்லை. தன்மானம் நசுக்கப்படும்போது உறவைவிட சுயமரியாதை முக்கியம். ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு அருகிலிருக்கும் பூங்காவிற்கு சென்றாள்.இலக்கியனை விளையாட அனுப்பி விட்டு ஓடும் நீரோடை அருகேயுள்ள இருக்கையில் அமர்ந் தாள்.அந்த நீரோடை சலசலவென்று ஓடியது மனதுக்கு இதமாக இருந்தது.அந்த சத்தம் காலில் சலங்கை கட்டி ஓடும் குழந்தையை அவளுக்கு நினைவுறுத்தியது.சூரியனின் மாலைநேர மஞ்சள் ஒளியை நீரோடை தனக்குச் சொந்தமாக்கி மனதை மயக்கியது.நீரைத் தழுவி வீசிய காற்று உடலைச் சிலிர்க்கச் செய்தது.

கொஞ்சநேரம் அந்த அந்திமாலை நேரத்தை இரசித்தவள் மகள் இலக்கியாவை அருகிலிருத்தி அணைத்தபடி பேசத் தொடங்கினாள். 'இலக்கியா! நாங்க தனியப் போனால் நீங்க அப்பா வேணுமென்று நினைப்பீங்களா?என்னால் பெரிய வசதிகள் செய்து தராவிட்டாலும் ஓரளவுக்குப் பார்த்துக்கொள்ள முடியும். அப்பாவைப் பற்றிய யோசனை இல்லாமலிருந்தாலே என்னால் உங்களுக்கு அன்பைக் குறைவில்லா மல் அள்ளித்தர முடியும்.சுரேகாவின் அப்பா ஒருநாளும் உங்களுக்கு அப்பாவாயிருக்க முடியாது.அவர் அங்கேயே போகட்டும்.எங்களை ஏமாற்றி இரட்டை வாழ்வு வாழ்பவர் எங்களுக்கு வேண்டாம்.நாங்களா கவே தன்னை விட்டிட்டுப் போகட்டுமென்றுதான் சண்டை பிடிக்கிறாரா க்கும்.எங்களுக்கு வலிக்கும் என்று தெரிந்தே வலிகளைத் தரும் உறவு எங்களுக்கு எதற்கு?வேண்டாம் என்று போகிறவர்கள் போகட் டும்.எங்களைக் கைப் பிடித்து செல்வதற்கான விரல்கள் அவருடையது இல்லையென்பதைப் புரிந்து கொள்வோம்.அவருக்கான விரல்களை அவர் பிடிக்கட்டும். தன்மேல் அன்பு கொண்ட எங்களை ஏமாற்றுவது, எங்கள் பாசத்தையும்,நம்பிக்கையையும் ஏமாற்றுவது இதெல்லாம் துரோகம் அம்மா.துரோகியுடன் வாழாமல் தனியே போறது ஒன்றும் தப்பில்லை.தரம் தாழ்ந்து போகாமல் வாழ்ந்தால் அதுவே போதும். தலைக்கனம் பிடித்தவள்,திமிர் பிடித்தவள் என்றெல்லாம் எங்கடை சமூகம் என்னைப்பற்றிச் சொல்லும்.நாங்க வலியில் துடிக்கிறதோ,கண் ணீருடன் இருப்பதோ,எங்கள் மகிழ்ச்சி பறிக்கப்படுவதோ,எங்கள் கனவு கள் சிதைவதோ யாருக்கும் தெரியாது.எமக்கு எது நல்லது என்று இப்போது தெரிகிறதோ அதைச் செய்து கொண்டு போவம்.இவ்வளவு நாளும் அவருடைய அன்பைத் தக்க வைக்க உங்களைக் கஷ்டப்பட விட்டிட்டன்.இனி எங்களுக்காக வாழுவம்.இனி எங்கடை வாழ்க்கையில் அவரில்லை.அதைப் புரிஞ்சு ஏற்றுக் கொள்ளுங்கோ. அவ்வளவுதான்'

பேசி முடித்தபோது தன் கவலைகள், பாரங்கள், அவமானங்கள் எல்லா வற்றையும் மனதுக்குள் பூட்டி தன்மானத்தை இழந்து போலிப்புன்னகையுடன் சிக்கலான உறவுடன் வாழ்ந்தது முடிவுக்கு வந்ததே போதும் என்ற நினைவு மனதை இலேசாக்கியது. வெறுப்பைக் கக்கின வார்த்தை களை உள்வாங்கி நெஞ்சமெல்லாம் பரவ விட்டு அதையே நினைத்து நினைத்து பிள்ளைகளை உள்வாங்க முடியாமல் தவித்ததெல்லாம் ஒரு நொடியில் முற்றாக மறைய வாழ்ந்து காட்டுவோம் என்று நெஞ்ச மெல்லாம் நேசத்தை பிள்ளைகளிடம் வைத்து தளராத நெஞ்சுடன் வெற்றி நடை போடத் தன்னைத் தயாராக்குவதில் தீவிரமானாள் லதா. அவள் முடிவு சரியானதா என்பது காலத்தின் கரங்களில் ஒப்படைக்கப் படுகிறது. பிரபஞ்சத்தில் உலவிக் கொண்டிருந்த வார்த்தைகள் தன்னு டைய அலைவரிசையுடன் தொடர்புடைய லதாவின் வாயிலிருந்து வசனங்கள் மூலம் வெளிப்பட்டன.நீரோடை சலசலப்புடன் லதாவின் முடிவை ஆமோதித்தது. அம்மாவின் கரத்தோடு கரம் கோர்த்து நிம்மதியாக தோளில் தலை சாய்த்தாள் இலக்கியா.



Dr ஜலீலா முஸம்மில், ஏறாவூர்

# ஊதல் சுழிக்காற்று

மூளையிலும்
இதய வெளியிலும்
மூட்டை மூட்டையாய்
நிரம்பி இருக்கின்றன

ரத்தம் முழுவதும் வியாபித்து
ஓடுவதாய் சில நேரங்களில் உணர்வு

சித்தம் கலங்கி குமிழிகள் குமிழிகளாக
வெளிப்படுவதாக
ஒரு உதிப்பு

சிறகுகளை மலர்த்த உன்னிக்கும் பறவை
போல்
ஒரு கனவு

தொண்டைக்குழிக்குள் அடங்காமல்
பீறிட்டு
எழுகின்றன அவை

இரைப்பையிலிருந்து எம்பி ஊதல்
சுழிக்காற்றாய் மேலெழுகின்றன

சலசலத்து சலனத்தோடு
சங்கேத மொழியில்
சங்கீதம் பாடுகின்றன

சிக்கிமுக்கிக் கல் ஒன்று
தினாவெட்டாய் மதர்ப்போடு
தயாராய் இருக்கிறது
நெஞ்சக்குழிக்குள்

விர்ரென்று வான்வெளியில் உலாவ
வேண்டும்
போலொரு ஆவல்

காலம் நெருங்கி விட்டது
கரையேற வேண்டும்

விடைத்துப் பெருகி
வேகத்துடன் எம்பக்காத்திருக்கும்
இந்தச்சொற்களை
விடுவிக்காதிருக்கையில்
மூச்சு முட்டிப் போகிறது

திட்டு முட்டென்று
தவித்துப்போய்க்
கிடக்கிறேன்

சொற்களோடு சங்கமம் ஆகிச்
செரிமானம் அடைந்து
உள்ளக்கருவறைக்குள் அடங்கி,
பின்னொரு பொழுதிலதையே
அடைகாத்ததில்
இந்த இனம்புரியாத வலி

உப்பிய உணர்வதனை எப்படியாவது
வெளிக்காட்டவே அத்தனை துடிப்பு

வெள்ளைத்தாள்கள் எனது
விடாய்க்கான தண்ணீர்க் கோபுரங்கள்

வெறுமனே வெள்ளந்தியாய்
இருந்த விறகுக்கு
இப்போது

சுடர் விட்டெரியும்
வீரத்தாபம்

திரைகள் சுழன்றடித்து விலக
பேரனர்த்தம் நிகழ்வதாய்
இதயத்துடிப்பு எகிறும்

சூல் கொண்ட கருமேகம்
சுதாரித்துக்கொண்டு
தயாராகும்

ஆதியின் ஆதாமாய்
தேடலில் அலையும்


அதீத ஸ்வரத்தில்
யாழ் மீட்டக்
கருணாநதி பீறிடும்

தீராத வேகத்தில்
தெரியாது பீய்ச்சியடிக்கும்
ஒளிக்கிரணங்களுமவை

பேசுதற்கு
ஒன்றுமில்லாமல்
போகும் வலியை மிகும்
தீரா சம்பாஷணைக்கு
ஆன்மா தயாராகி விட்டது

பேச்சறு நிலையில்
ஞானக்கலவையைப் பருகிக்
கிடந்த ஆழிக்குடுவை
இப்போது சூரியனைப் பிரசவிக்க
ஆரம்பிக்கிறது

அங்கே சொற்களின்
பிறவிப்பரிமாணங்கள்
ஆர்த்துப் பிறந்து
வீறிட்டுத்துடித்து விழுகின்றன!!



# ஒருவழக்கு– ஓர் இரவு– நான்கு கோணங்கள்

பட்டுக்கோட்டைராஜா

இரவு நேரம். ராமாபுரம் மேலத்தெருவிலிருந்த வீராச்சாமியின் குடிசையில் எரிந்த சிம்னிவிளக்கு, தனது ஒற்றைக்கண்ணால் சாணம் மெழுகிய மண்தரையில் படுத்திருந்த மூவரையும் வெறித்துப் பார்த்திருந்தது.

``என்னய்யா, சாதாரணமாப் படுத்த மறுநிமிசமே குறட்டை பறியும்....இன்னிக்கு என்னாச்சி?''-மனைவி ராசாத்தி கேட்டாள்.

``ஆமா புள்ளே, நம்ம கேசுல நாளைக்குத் தீர்ப்புன்னு நீதிபதி சொல்லிட்டாரு...அதான் நல்ல தீர்ப்பு வரணுமின்னு மனசு கிடந்து தவிக்குது... அகிலா டீச்சரு ரொம்ப நல்லவங்க...மாணவர்கள்ட்ட சாதியே பார்க்க மாட்டாங்க...நம்ப மவன் சங்கருக்கே எவ்வளவோ உதவி பண்ணியிருக்காங்க....!''

``இதை நீ நீதிபதி ஐயாகிட்ட சொல்லவேண்டியதுதானே?''

``சொன்னேனே...ஆனா நீதிபதி என் வார்த்தைகளை நம்பினாரான்னு தெரியலை ராசாத்தி...அருண்ங்கிற பையன் வகுப்பறைக்குள்ளேயே மலம் கழிச்சிட்டான்... அதை நம்ம பயல் சங்கர், தானே தண்ணி ஊத்திக் கழுவி விட்டிருக்கான்...ஆனா அந்த கவுன்சிலர் நாகராஜன், அகிலா டீச்சர்தான் சங்கரைவிட்டுக் கழுவச்சொன்னாங்க... மாணவர் மத்தியில நம்ம சாதியை இழிவு படுத்திட்டாங்கன்னு கேஸ் போட்டாரு!''

``இது என்னய்யா, சூத்துல அடிச்சு பல்லு விழுந்த கதையா இருக்கு!... நம்ம மேல கவுன்சிலருக்கு என்ன அவ்வளவு அக்கறை?''

``நம்ம மேல உள்ள அக்கறையில் அவரு கேஸ் போடலை புள்ளே...அவரு முதல்ல என்கிட்ட வந்துதான் கேஸ் போடச் சொன்னாரு... நான் முடியாதுன்னு சொன்னதால நம்ம சாதிக்காரங்கள்ட்ட நல்ல பேரு வாங்குறதுக்காக அவரே கேஸ் போட்டிருக்காரு.... நம்ம பய சங்கரும், `நானேதான் கழுவினேன்... டீச்சரு என்கிட்ட எதுவும் சொல்லலை!'னு தெளிவாச் சொல்லிட்டான்!''

``பொறவு என்னய்யா?''

``நீதிபதி மனசுல என்ன இருக்குன்னு தெரியலையே... அவரு என்ன சொல்வாரோன்னுதான் எனக்குத் திக்குனு இருக்கு... அகிலா டீச்சருக்கு எதுவும் ஆகிடுமோன்னுதான் எனக்குப் பயமாவும் இருக்கு!''

``அப்படியெல்லாம் தப்பு நடக்காதுய்யா... நமக்கெல்லாம் மேல ஆண்டவன்னு ஒருத்தன் இருக்கான்... அவன் பூமியில நடக்குற எல்லாத்தையும் பார்த்துகிட்டுத்தான் இருக்கான்... நல்ல தீர்ப்புதான் வரும்... நீ கண்ணைமூடிட்டுத் தூங்குய்யா!'' என்ற ராசாத்தி தன் கணவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

❍

தெற்குவீதியில், நாகராஜனின் மாடிவீட்டிலும் நித்திராதேவி இன்னும் வாசம் செய்யவில்லை.

வீட்டுக்கு முன்னால் பரந்துவிரிந்து கிடந்த புல்வெளியின் நடுவே டீப்பாய் போட்டு, அதன் மீது சரக்கு பாட்டில்களை அடுக்கி ஒவ்வொன்றாய் காலி செய்து கொண்டிருந்தான், நாகராஜன்.

``போதும் தலைவரே, ரொம்ப அதிகமா உள்ளே போய்டுச்சி... நிறுத்திட்டுப் போய்த் தூங்குங்க!''- என்றான் பணியாள் செல்லையா.

``தபாரு செல்லையா, படுத்தாலும் எனக்குத் தூக்கம் வராதுய்யா... ஒரு பொம்பளை என்னை எதிர்த்து நிக்கிறா.... நாளைக்கு நமக்குச் சாதகமான தீர்ப்பு வரலைன்னு வையி, இந்த ஊர்ல ஒரு பய என்னை மதிக்கமாட்டான்!''

``உங்க கணிப்பு தப்புங்கய்யா... உங்களைப் பற்றி ஊருக்குள்ளே எல்லாரும் நல்லவிதமாத்தான் பேசிக்குறாங்க... நானே என் காதால் கேட்டேன்!''

``என்னய்யா பேசிக்குறாங்க!''

``தாழ்ந்தசாதிக்காரன் ஒருத்தன் கேஸ் போட முன் வராதப்போ அவங்க சார்பா நம்ம கவுன்சிலரே செலவு பண்ணி கேஸ் நடத்துறாருன்னா, அவருக்கு எவ்வளவு பெரிய மனசு, அப்படித்தான்யா பேசிக்குறாங்க!''

``அப்படின்னா சரி!''

``அந்த அகிலா டீச்சர்கூட உங்களுக்கு என்னய்யா பிரச்னை?''

``அவள் சரியான ராங்கிக்காரிய்யா... நான் ரெண்டு மூணு வேலை செய்யச் சொல்லி அவகிட்ட கேட்டேன்... அவ ஒண்ணுகூட செய்யலை... ஏழைப் பிள்ளைகளுக்கு டியூஷன் எடுக்கச் சொன்னேன்... முடியாதுன்னு மறுத்திட்டா... நானே அதுக்குப் பணம் கொடுக்கிறேன்னு வேறு சொன்னேன்...ஸ்கூலில் நான் பாடம் நடத்துறேன்- வீட்டுக்கு ஸ்கூலைக் கொண்டு போக முடியாதுன்னு சொல்லிட்டாய்யா!''

``அவ்வளவு திமிர் பிடிச்சவளா அந்தப் பொண்ணு?... தெருவுல குனிஞ்ச தலை நிமிராம நடக்குறாளே?''

``எல்லாம் வேசம்...!அவளுக்குச் சார்பா தீர்ப்பு வந்திடுச்சின்னு வையி, அவளைக் கையில பிடிக்கவே முடியாது!''

``நீங்க எதுக்குத் தலைவரே அவ கையைப் பிடிக்கணும்?''

``முட்டாள்தனமாப் பேசாதய்யா.... அவளுக்குத் திமிர் இன்னும் ஏறிடும்னு சொல்றேன்!''

``அது சரிதான் தலைவரே! ஆனா உங்களுக்குச் சார்பான தீர்ப்புதான் வரும்!''

புதுத்தெரு, காந்திஜி காலனியில் குடியிருந்த அகிலாவின் வீட்டிலும் விளக்குகள் விழித்திருந்தன. அகிலா தனியார் தொலைக்காட்சி ஒன்றில் பழைய பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

``ஆசை-கோபம்-களவு கொள்பவன் பேசத்தெரிந்த மிருகம்... அன்பு-நன்றி- கருணை கொண்டவன் மனிதவடிவில் தெய்வம்!'' என்ற கவியரசரின் வார்த்தைகளை `டி.எம்.எஸ்' மனமுருகிப் பாட, நடிகர்திலகம் சாமியார் உடையில் இயல்பாக நடந்து கொண்டிருந்தார்.

``என்ன அகிலா, தூக்கம் வரலையா?''-என்று கேட்டபடியே அவள் கணவன் ஆதவன் அருகில் வந்து படுத்தான்.

``நானும் சாதாரணப் பெண்தாங்க.... கோர்ட்டு-கேசுன்னு இதுவரை எங்கேயும் நான் போனதில்லை... என்னதான் தைரியமா இருந்தாலும் மனசுக்குள்ளே லேசா பயம் இருக்கத்தான் செய்யுது!''-என்றாள் அகிலா.

``அந்த நாகராஜன் மோசமானவனாம்.... அரசியல் செல்வாக்கும் அவனுக்கு இருக்கிறதால நம்பளை எச்சரிக்கையா இருக்கும்படி என் நண்பர்கள் சொன்னாங்க... எனக்கென்னவோ அவன் கேட்டதை நீ கொடுத்திருக்கலாம்னுதான் தோணுது... அவன் கூட எதுக்கு வம்பு?''-ஆதவன் யதார்த்தமாய்க் கேட்டான்.

அவன் தன்னையே கேட்டான் என்று அகிலாவால் சொல்லமுடியவில்லை. விரக்தியாய்ச் சிரித்தாள்.-``நல்ல குடும்பத்துல பொறந்த எந்தப் பெண்ணாலும் அவன் கேட்டதைக் கொடுக்க முடியாதுங்க!''

``அப்படி அவன் என்னதான் கேட்டான்?''

``அதான் வேணாங்கிறேனே....விடுங்க... நான் பயந்து அவன் கேட்டதைக் கொடுத்திடுவேன்னுதான் என் மேல கேஸ் போட்டிருக்கான்.... பார்ப்போம், கடவுள் யார் பக்கம் இருக்கான்னு நாளைக்குத் தெரிஞ்சிடும்!''

``எதுக்கும் எச்சரிக்கையா நடந்துக்க அகிலா!''

``மிஞ்சிப் போனால் அவனால என்னங்க செய்யமுடியும்?....அரசியல் செல்வாக்கை வச்சி என்னை ஊர்-ஊரா மாற்றத்தான் முடியும்.... அதுக்கெல்லாம் பயந்தவள் நான் கிடையாது!''

``அந்த கேஸையே கவனிச்சதுல என்னை நீ ஒருவாரமா கவனிக்கவே இல்லை அகிலா!''- ஆதவன் கெஞ்சும் தொனியில் கேட்டான்.

``அப்படியா?...ஆமால்ல, நானும் மறந்தே போய்ட்டேன்... என் மனசுக்கும் `டைவர்ஷன் தேவைதான்!''- என்ற அகிலா முதலில் தொலைக் காட்சியை அணைத்தாள். பிறகு தன் கணவனை அணைத்தாள்.

நீதிபதி ரெங்காச்சாரியிடம் ஒரு விநோதமான பழக்கம் இருந்தது. பொதுவாக நீதிமன்ற நடவடிக்கைகள் பற்றி வீட்டில் அவர் விவாதிப்பதில்லை. `வீடு வேறு-கோர்ட்டு வேறு' என்பார். ஆனாலும் சில சமயங்களில் தன் பெயர்த்தி வேதிகாவிடம் கருத்துகள் கேட்பார். அவள் அதீத புத்திசாலி. மனநலமருத்துவம் படிக்கிறாள்.

அன்று இரவு உணவுக்குப் பிறகு வேதிகாவுடன் நடைப்பயிற்சி மேற்கொண்ட ரெங்காச்சாரி, ``வேதிகா, அந்த டீச்சர் அகிலா கேஸ் உனக்குத் தெரியும்தானே? எல்லா லேடீஸ் மேகஸினிலும் அதைப் பற்றி எழுதினாங்க?''

``ஆமா தாத்தா, அந்த அகிலா டீச்சருக்கு சமுதாயத்துல நல்ல பெயர்...அந்த கேஸுல தீர்ப்பு என்னிக்கு தாத்தா?''

``நாளைக்கும்மா.... அதில் எனக்குச் சில குழப்பங்கள்!''

``என்ன குழப்பங்கள் தாத்தா?''

``பள்ளிக்கூடத்துல அசிங்கம் பண்ணினது அருண்ணு ஒரு பையன்... அவன் கவுன்சிலர் நாகராஜனுக்கு உறவு... அதைக் கழுவியது `ஸ்காவெஞ்சர்- வீராச்சாமியோட மகன் சங்கர்...அவனும், தானே கழுவினதாத்தான் சொல்றான்... இதுல நாகராஜன், `சாதி-அவமதியாதை' பண்ணிட்டதா அகிலா மேல எதுக்காக கேஸ் போடணும்?''

``என்ன தாத்தா உங்களுக்குப் புரியலையா? இதுக்கு மோடிவ்வே வேற... அந்த அகிலா படத்தை நான் முகநூலில் பார்த்தேன்... நிஜம்மாவே அழகா இருக்கா... நாகராஜன் அவளுக்கு `ரூட்' போட்டிருப்பான்... அவள் மறுத்திருப்பாள்... அவளை எப்படியாவது தன் வழிக்குக் கொண்டுவர `சாதி-அவமதிப்பு' வழக்கு போட்டிருக்கான்!''


``அந்த நாகராஜன் சமுதாயத்துக்கு உழைக்கிறதுக்காக கல்யாணமே பண்ணிக்கலைனு கோர்ட்டில் சொன்னாம்மா!''

``கல்யாணம் பண்ணினவனுக்கு ஒரு மனைவி-கல்யாணம் பண்ணாதவனுக்கு ஊரெல்லாம் மனைவி'னு சொல்வாங்க இல்லையா?''

``அட படவா, கதை அப்படிப் போகுதா?... அவனை என்ன செய்றேன் பாரு!''- ரெங்காச்சாரி அப்போதே மனதில் தீர்ப்பு எழுதிவிட்டார்.

சா.கா.பாரதி ராஜா

# மழையே! மழலையே!



அடிக்கு
அழும் குழந்தை தான்
கன்னத்தில்
மழைத்துளிகளின் அடிகளை
ஆனந்தமாக வாங்குகிறது

குடைகளை விரிக்கும்
பெரியவர்கள் மத்தியில்
கைகளை விரிக்கிறார்கள்
குழந்தைகள்

துள்ளிக் குதித்து
விளையாடும் குழந்தையோடு
மழை நீரும்
துள்ளிக் குதிக்கிறது
சேர்ந்து விளையாட...

தங்களை
விடுதலை செய்ய
மழைக் கம்பிகளில்
சிறைபட்டுக் கொள்கிறார்கள்
குழந்தைகள்

மழை கூட
மனிதனாகி விடுகிறது
சில நேரங்களில்
பாசங் காட்டுவதும்
சில நேரங்களில்
பயமுறுத்தவும் செய்கிறது

குழந்தைகளோ
பயமுறுத்தினாலும்
பாசங் காட்டவே
செய்கிறார்கள்

வானமே!
வெய்யிலைக் கொட்டியது
போதும்
வெய்யிலை
அள்ளிச் செல்ல
மழையாக வா!

மழைக் கரங்களாக
மண்ணில் விரி
மழலைகள்
கரங்களை விரிக்கிறார்கள்

ஒரு விதத்தில்
வளர்ந்த மனிதர்களைப் போல
அல்ல
உடைந்தாலும் சேர்கிறாய்
மழலையைப் போல...

மழையே!
மழலையே!

# தங்கேஸ் கவிதைகள்



### நேசம்

ஒரு வார்த்தைக்கு மட்டும்
பிறிதொரு வார்த்தை என்றும் இல்லை
அதுவும் நேசத்தை வார்த்தையில்
சொல்வதென்றால்
ஒரு கடலை குடித்து விட்டு வர வேண்டும்

நானோ உதிர்த்த விண்மீன்களை
கைகளில் ஏந்திக்கொள்ள துடிப்பேன்
அபலைச் சருகுகளை எடுத்து
முகத்தோடு உரச விடுவேன்
கண்திறக்காத குட்டிப் பூனைக்கு
வெண் சங்கில் பாலை புகட்டுவேன்

எண்ணங்களில் ஒரு பாலம்
கட்ட முடிந்தால் போதும்
நட்டநடு நிசியில் உன் முன்
ஒரு முழு அல்லி இலை போல
வந்து நிற்பேன்
மார்பில் தலைசாய்த்து
லப்டப் இசையை ஸ்வரம் பிரிப்பேன்

உதிரும் மூச்சுக்களை கோர்த்து
உனக்கொரு ஒரு மாலை கட்டுவேன்
பின்பு உனக்காக எழுதப்பட்ட
இந்தக் கவிதையை
கிழித்துப் போட்டு விட்டு
உன் உள்ளங் கால் பாதத்தில்
ஒரு துளி கண்ணீரை எடுத்து
திருஷ்டிப்பொட்டிட்டு வருவேன்

❍

## காலத்தை உண்ணும் நட்சத்திரங்கள்


தண்ணீர் குடத்துக்குள் தழும்பிய
வெண்குமிழ்கள்
வெள்ளிக்கெண்டைமீன்களாய்
துள்ளிக்கொண்டிருந்தன
காலை வெளிச்சத்தில்

குடத்தை சுற்றி வளைத்திருக்கும்
கண்ணாடி வளையலணிந்த கையை
இரு மாமாங்கமாய் பார்த்தபடியே நிற்கிறான்
என் சாயலொத்த சிறுவன்

முன்னிரவு நேரம்
நிறைமாத சூலியின்
நிறைந்த வயிறாய்
தழு தழும்பிக்கொண்டிருக்கும் நீலவானத்தில்

பனிக்குடத்தில் மிதக்கும் சிசுக்களாக
தலைப்பிரட்டையளவு நட்சத்திரங்கள்
கால அழுக்கை தின்றபடி
கண்கொட்டாமல்
வெறித்தபடியே இருக்கின்றன
பூமியை

❍



## வழி தப்பிய நாரைகள்

இரவில் வழிதப்பி தட்டழியும்
அந்த வெண்நாரைக் கூட்டங்களின்
பரிதவிப்பை விடவா
உங்களின் பரிதவிப்பு
அதிகமாக இருந்து விடப் போகிறது?


தழும்பி வழியும் குவளையை
கவிழ்த்து
வெற்றிடமாக்கிவிட்டு
நீங்கள் நிம்மதியாக இருக்கலாம்
பாவம் அவைகள் என்ன செய்யும்?

பிளந்த பனங்கிழங்கினைப்போன்ற
அலகினை வைத்துக் கொண்டு
கேவி கேவித்தான் அழ முடியுமா
இல்லை துக்கத்தை ஒரு கவிதையில்
இறக்கி வைத்து விட முடியுமா?

இந்த மரம் உதிர்க்கும் இயலாமையின்
பெருமூச்சுத்தான்
காற்றில் விசும்பும் சருகு என்று
நான் கண்டு கொண்ட நொடியிலிருந்து
எனக்கு நிம்மதியாக தூக்கமில்லை

மனமற்ற உயிர்களின் மனமாக இருந்து
துயரத்தை சுமந்தாலென்ன என்று
என் மனம் கேட்டது?
ஆனால் அதை தேடிய போது
அங்கில்லை
ஆனால் கொத்து கொத்தாக
வெண்நாரைக் கூட்டங்கள்
வானில் பறந்த வண்ணமேயிருந்தன.

# கவிஜி கவிதைகள்



## ஓர் ஓடையை செய்து முடித்திருப்பேன்

முன்னிருந்து
தோன்றுவதையெல்லாம்
நான் பின்னிருந்து யோசிக்கிறேன்

அடுத்த பத்திக்கு செல்லும் முன்
முந்தின பத்தியை
நான் மறைக்க வேண்டும்

மலர்களின் கரங்களை குவித்து
இதழ் செய்யும் எனக்கு
மிச்சமும் புது எண்ணம் தான்

நகல்களின் நனவோடைக்கு
சற்று முந்தியோ சற்று பிந்தியோ
ஓர் ஓடையை செய்து முடித்திருப்பேன்

பின்பு எல்லாமே முன்னிருந்து
தோன்றுவது தான்
பிறகு எல்லாமே பின்னிருந்தும்
யோசிப்பது தான்

அதைத்தான் செம்மாந்த சிறு ஓவியக்
கூட்டிலிருந்து எட்டி எட்டிப் பார்த்துக்
கொண்டிருக்கிறேன்

முன்பொருமுறையும்
இது நிகழ்ந்திருக்கிறது

நிற்க

ச்சு ச்சு என விரட்டப்படும்
குருவியோ பறவையோ
உங்கள் விருப்பம் தான் நான்

## கண்ணம்மாக்களின் மொத்தம் நீ


பூனை நடையில்
பின் தொடர்கிறேன் ஒரு தென்றலாக
பூக்கள் பூக்கும் தருணமெல்லாம்
உன்னிடமே இருக்கிறது
நந்தியென உன் வழியில் காத்திருக்கும்
சிலையெல்லாம்
நானாகிடத்தான் இந்த தவிப்பு
உன் ரகசியம் அறிந்து கொள்ளும் ஆர்வத்தில்
காதாட்டி அலையும் காற்றானை நான்
காதருகே மௌனம் சம்பவிக்கும் மணித்துளிகளுக்கு
மெல்ல சிரி போதும்
உன் தூரத்து குரலுக்கு யாகம் உடைக்கும்
வல்லமை
வானில் இடத்தையெல்லாம்
வந்து தழுவும் கண்ணம்மாக்களின் மொத்தம் நீ
உன்னுடன் கதைக்க வேண்டியதெல்லாம்
நான் என்னுடன் கூட கதைத்ததில்லை
வானத்தின் நீலமெல்லாம்
நீ கண்கள் சிமிட்டிய பொழுதுகளில் புலர்ந்தவை
ஒற்றை மனதுக்குள் புழுங்குகிறது
ஓயாமல் உன் உலகம் சுற்றும் என் பூமத்திய
ரேகை
தூரத்தில் நீ இருக்க துக்கித்து கிடத்தல் வரம்
எனக்கு
உன்னிடம் கேட்காமலே
உன்னை மொழி பெயர்க்க ஆரம்பித்து விட்டேன்
நான் எப்போதோ தொலைத்த நட்சத்திரங்களை
உன் மூக்குத்திகளில் கண்டெடுக்க
ஆரம்பித்த கதையை பிறகு சொல்கிறேன்.....!

❍

## இருட்டு தேடும்
## வெளிச்சம் வாங்கிகள் அவர்கள்

எந்த பெண்ணின் நட்புலகில்
நுழைந்தாலும் அவர்கள் இருக்கிறார்கள்
நரை கூடாத நயமிக்கவர்கள்
மூச்சடக்கி புகைப்படத்தில் முத்தெடுக்கிறார்கள்
மாலைக்கண் வியாதி போல
ஆண் கவிகள் அவர்களுக்குத் தெரியார்
பெண் கவிதைகளுக்கு லைக்ஸ் கமெண்ட்ஸ்
குத்தகைக்கு எடுத்தோர்கள் அவர்கள்
பெண்ணுரிமைக்கு முன்னால் நிற்பார்கள்
பின் இன்பாக்சில் வாட்சப் எண் கேட்பார்கள்
இருட்டு தேடும் வெளிச்சம் வாங்கிகள் அவர்கள்
வித விதமான கண்ணாடிகள்
அவர்கள் வார்த்தைகளில் இருக்கின்றன
மறந்தும் ஆண்கள் பக்கம் போய் விடாத அவர்கள்
ஒருபோதும் புகைப் படத்தில் கூட தங்களை
மாற்றிக் கொள்வதில்லை
அவர்களின் அடையாளம்
பூசிக் கொள்ளும் சாயத்தில் மட்டுமல்ல என்பதை
கண்டு பிடித்த பின் தான் வேறு வழியின்றி
பகிரங்கப் படுத்த வேண்டியதாகி விட்டது
என்னைப்பற்றி கவலைப்பட வேண்டாம்
அவர்கள் என்னை தாக்காதிருக்க
என்னிடம் இன்னொரு பெண் பெயர்
இருக்கிறது....!

# கோவை ஆனந்தன் கவிதைகள்



உதடுகளில் மலரும்
புன்னகையை தொலைத்து
எந்த இசைக்கருவியின்
இசையால்
எதிரில் நிற்பவரை
வசப்படுத்தலாமென யோசிக்கும் போதே
திட்டமிட்ட அன்றைய பொழுது
எதிரில் இருந்தவரோடே
கடந்து விடுகிறது.

❍

கொஞ்ச நேரம்
அழுது தீர்த்தபின்தான்
லேசாகிறது
வானமும்

❍


கொஞ்சம் பொறுமையாகவும்
அமைதியாகவும்தான்
காலத்தை
கடத்த வேண்டியுள்ளது
முகத்திரைகளோடு திரிபவர்களின்
உண்மையான
முகத்தைக் காட்டும்
உன்னத நாளுக்காக....

❍

வலிமையெனும்
பேராயுதத்தால் பலமுறை
மோதிய காற்றும்
கடைசியாகத்தான்
உதிர்த்து விடுகிறது
சிறு பூவை...

❍

முட்களில்லாத
செடியெனத் தெரிந்ததுமே
எலும்பில்லாத உறுப்புகளும்
பூக்கள் பறிப்பதில்தான்
குறியாயிருக்கின்றன.



# அத்துமீறல்

சுந்தரிமணியன்

அதிகாலையின் அழகை தோட்டத்தில் ரசித்துக்கொண்டிருந்த கார்குழலிக்கு அவள் பெயருக்கு ஏற்றாற்போல நீண்ட கூந்தல் பின்னழகைத் தொட்டது. அந்த இளவெயிலில் தகித்துக் கொண்டிருந்த செம்பருத்திப் பூக்களையும் அரளிப் பூக்களையும் இன்னும் மணந்து மணம்பரப்பும் மைசூர் மல்லிகையையும் ரசித்துக்கொண்டிருந்தாள். அந்த மணமும் குளிர்ந்த காற்றும் அவள் மனதை இன்னும் ரம்மியமாக்கிக் கொண்டிருந்தன. சீக்கிரம் அலுவலகம் கிளம்பியாக வேண்டும். ஆபிசில் ஜி.எம்மை நினைத்தாலே மனதின் மொத்த மகிழ்ச்சியும் வடிந்து போகிறது.

இன்றைக்கு என்ன பண்ணப் போறாரோ. இந்த ஆளு என்று மனதிற்குள் ஒரு நடுக்கம் பரவியது. இன்னைக்கு ஏதாவது செய்யட்டும் கத்தி சண்டை போட்டுற வேண்டியதுதான் என்று நினைத்த குழலிக்கு, அப்படி ஏதாவது செய்தால் அந்தாளு திசைதிருப்பி தன்னை ஏதாவது சொல்லிவிட்டால் என்ன செய்வது என்று குழப்பம் மண்டியது. சரி பார்க்கலாம் இதெற்கெல்லாம் பயந்தால் எப்படி வேலை பார்ப்பது என்று நினைத்துக் கொண்டாள். இருந்தாலும் ஆபிசில் ஜி.எம் கூப்பிட்டனுப்பினால் தன்னையும் அறியாமல் கைகால் உதறத் தொடங்கி விடுகிறது.

இப்படியெல்லாம் அலைபாயும் தன்மனதை அடக்கிக் கொண்டு தோட்டத்தை விட்டு வெளியே வந்தாள். குளித்து கிளம்பி, ஆபிசின் முகப்பிற்கு வந்த போது மணி ஒன்பது ஐம்பது. பத்துமணி ஆபிசிற்குச் சரியாக வரும் பழக்கம் கொண்டவள் குழலி. தனது மேஜைக்கு வந்து நாற்காலியில் அமர்ந்தவள் பக்கத்து சீட்டில் தனது தோழி இன்பா வந்திருக்கிறாளா? என எட்டிப்பார்த்தாள்.

"என்னடீ எட்டிப் பார்க்குற. சாப்டியா?" என்றாள் இன்பா.

"சாப்பிட்டேன். இவ்வளவு லேட்டா ஏண்டீ சாப்பிடுற. வீட்ல சாப்பிட்டு வரவேண்டியதுதான"

"சாப்பிட நேரம் இருந்தாதான. எந்திரிச்சது ஒன்பது மணி. உன்னைய மாதிரியா காலைல ஆறுமணிக்கு எந்திரிச்சு அம்மாவுக்கு உதவி செஞ்சுட்டு வருவாங்க. வாழ்க்கைய என்ஜாய் பண்ணனும்டீ"

"ஆமாமா என்ஜாய் பண்றேன்னு இரவு பூரா கண்விழிச்சு, செல்லப் பார்த்துட்டு, உடம்பக் கெடுத்துட்டு, பின்னாடி அவஸ்தைப் படப்போற"

"அடிப்போடி இவளே" என்று சொல்லி, குழலியைப் பின்னுக்குத் தள்ளி பக்கத்து அறையில் வாஷ்பேசினில் கைகழுவி, டிபன் பாக்சை மூடி வைத்தாள்.

"ஏண்டி அந்த டிபன் பாக்ச கழுவக்கூடாதா. நீ நைட்டு வீட்டுக்குப் போறதுக்குள்ளாற நாறிப்போயிரும்"

"ஏண்டி வர வர என் அம்மா மாதிரியே பேசுற. நையன்டீஸ்ல பிறந்தவன்றத நிரூபிக்கிறடீ" என்ற இன்பா மாடலாய் ஜீன்சும் மேலே அதற்கேற்றாற்போல் டாப்பும் அணிந்திருந்தாள். ஆனால் கார்குழலி காட்டன் புடவையும் அதற்கேற்ற டிசைனர் பிளவுசும் அணிந்து முகத்திருத்தமாய் இருந்தாள்.

"ஏண்டீ என்னைக்குத்தான் மாடலாய் வரப்போற. எப்பப் பார்த்தாலும் நாலுமுழ புடவையக் கட்டிக்கிட்டு"

என்ற இன்பாவுக்கு "ஏண்டீ இதுவும் நல்லாத்தான இருக்கு" என்றவளை, இடைமறித்து, "ஆமா. பழைய காலத்து ஆளுங்க மாதிரி. உடம்பு தெரியாம என்னைய மாதிரி சுடிதாரோ, ஜீன்சோ போடு. அப்பத்தான் அந்த ஆளும் வால ஆட்டமாட்டான்" என்றாள்.

"சரி டீ. இனிமே சுடிதார்லயே வாரேன்" என்றாள்.

"ஜி.எம் வந்துட்டாரா" என்ற குழலிக்கு,

"அவனுக்கு என்ன மரியாதை வேண்டிக்கிடக்கு என்றவள். அந்த ஆளு இன்னும் வரல" என்றாள்.

சொல்லிய கொஞ்ச நேரத்தில் ஆபிசில் திடீரென பியூன் எழுந்து நிற்க, சபாரி சூட் சகிதம் மோகன் உள்ளே நுழைந்தான். நாற்பத்தைந்து வயதிலும் இளைஞனாகத் தெரிந்த மோகனுக்கு அங்கிருந்த அனைவரும் ஒவ்வொருவராக குட்மார்னிங் சொன்னாலும் எல்லோருக்கும் தலையாட்டிவிட்டு, கார்குழலியின் கேபின் வந்தவுடன் ஓரக்கண்ணால் அவளைப் பார்த்து சிரித்து அவள் வெறுமனே கூறிய குட்மார்னிங்கைப் பெற்று பதிலுக்கு குட்மார்னிங் சொல்லி, முறுவலித்துவிட்டு உள்ளே சென்றான். பின்னாடியே சென்ற பியூன் சென்று, நடுநாயகமாக இருந்த அறையின் கதவைத் தள்ளி உள்ளே சென்று அமர்ந்தான். டேபிளின் மேலிருந்த பெல்லை அமுக்கி உள்ளே வந்த பியூனைப் பார்த்து,

"கார்குழலியைக் கூப்பிடு" என்றவுடன், வேகமாகச் சென்று,

"ஜி.எம் உங்களைக் கூப்பிடறாரு" என்றான். தனது பைல்களை எடுத்துக் கொண்டு, குறிப்பெழுத சின்ன டைரியையும் எடுத்துக்கொண்டு டென்சனுடன் ஜி.எம் அறையின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள்.

"வாங்க கார்குழலி" என்று புன்னகைத்து அவளின் அழகை ரசித்தான். லைட்டான பால்ரோஸ்கலரில் காட்டன் புடவையும் பிளவுசும் அளவெடுத்து அவளுக்கென்று கச்சிதமாகப் பொருந்தியிருந்தது.

கூந்தலை லூசாகப் பின்னியிருந்தாள். தலையில் வைத்திருந்த ஒற்றை ரோஜா அவள் அழகை இன்னும் மேம்படுத்தியிருந்தது. பெரிதாக அலங்காரம் செய்யாமலே இவ்வளவு அழகாய் இருக்காளே, இன்னும் அலங்கரித்திருந்தால் எப்படி இருப்பாள் என்று எண்ணி கனவு கண்டான் மோகன்.

“சார். சார்” என்று ரெண்டு மூன்று தடவை கூப்பிட்டும் விக்கித்துப் பார்த்துக் கொண்டிருக்க, அவள் பைலைக் கடுப்பாகி, டேபிளில் ணங்கென்று போடவும் சுயநினைவு வந்தவனாய், என்ன என்பது போல் அவளைப் பார்த்தான்.

“எதுக்கு சார் வரச்சொன்னீங்க. எனக்கு அவசர வேலையிருக்கு. அந்த திருப்பூர்காரனுக்கு செட்டில்மெண்ட பண்ணனும்” என்றாள்.

“இருக்கட்டும் உக்காரு. ஒரு கடிதம் உனக்கு டிக்டேட் பண்ணனும்” என்றவுடன் வேறு வழியில்லாது தர்மசங்கடத்துடன் அமர்ந்தாள். வந்து ரொம்ப நேரமாகியும் மோகன் போனில் பேசிக்கொண்டும் தன்னை ஓரக்கண்ணில் பார்த்துக் கொண்டும் இருப்பதைப் பார்த்தவுடன் கோபம் ஒரு பக்கம் வந்தாலும் அடக்கிக் கொண்டு சாதரணமாக மனதை வைத்தாலும், ஆபிசில் உள்ளவர்கள் தன்னைப் பற்றி எண்ண நினைப்பார்கள், இவ்வளவு நேரம் ஜி.எம் அறையில் என்ன பண்றா? என்பது போன்ற கேள்விகள் வந்தால் என்ன செய்வது? என பல எண்ணவோட்டங்கள் மனதை அலைக்களித்தன.

அவன் போனைப் பேசி வைத்தவுடன் நிமிர்ந்து பார்த்த குழலி,

“சார் நேரமாகுது. எனக்கு, கடிதம் டிக்டேட் பண்ணுங்க. போகனும்” என்றாள்.

“சரி எழுதிக்கங்க” என்று நிதானமாக அவன் சொன்னவற்றைக் குறித்துக்கொண்டு பத்து நிமிடம் கழித்து வெளியே வந்தவளை இடைமறித்த இன்பா,

“என்னடீ உள்ள ஒரே ரொமான்ஸா” என்றவளை முறைத்தவள்,

“ஏண்டீ அந்தாளு பண்றது தெரியும்ல. என்னை உள்ள வந்து ஏதாவது காரணம் சொல்லிக் காப்பாத்தியிருக்கலாம்ல”

“சரி சரி சொல்லிட்டேல்ல. இனிமேல் எப்படி அந்தாளைக் கலாய்க்கறேன்னு பாரு” என்று அமைதியானாள்.

கார்குழலிக்குத் தர்மசங்கடமாக இருந்தது. அடிக்கடி ஜி.எம் தன்னைக் கூப்பிட்டு பார்த்துக்கொண்டே இருப்பதும், மணிக்கணக்கில் உள்ளே உட்கார வைப்பதும், பேசாமல் வேலையை விட்டுவிடுவோமா? என சிந்தனைகள் திக்குத்தெரியாமல் ஓடிக்கொண்டிருந்தன.

பக்கத்திலிருந்த இன்பா அவளை உலுக்கி,

“என்னடீ என்னதான் ஆச்சு? உனக்கு. இதெல்லாம் ஒரு விசயமா? இதப்பத்தி யோசிச்சிட்டிருக்க, கவலைப்படாத” என்றாள். சட்டென்று அமைதியான குழலி தனது நாற்காலியில் சென்று அமர்ந்து வேலைசெய்ய ஆரம்பித்தாள்.

மதியம் இரண்டுமணிக்கு மதிய உணவைச் சுவாரசியமாகப் பேசிக்கொண்டே சாப்பிட்டு முடித்தவர்கள், காலையில் நடந்த விசயத்தை சுத்தமாக மறந்துபோனாள் கார்குழலி. நான்கு மணிக்குக் கிளம்பிய இன்பா,

“நான் பர்மிஷன்டி. ஒரு வேலையிருக்குக் கடைக்குப் போறேன். வரவா” என்று சொல்லிக் கிளம்பிச் சென்றாள். அவள் சென்றவுடன் தனது வேலைகளையெல்லாம் ஒவ்வொன்றாக முடித்தவள், ஜி.எம் சொன்ன கடிதத்தை அடித்து மெயிலில் அனுப்பினாள். மாலையில் விரைவாகக் கிளம்பவேண்டும் இல்லையென்றால் இந்த ஜி.எம் தொல்லை தாங்கமுடியாது என்று நினைத்துக்கொண்டாள். மாலை ஐந்து மணி ஆனவுடன் கிளம்பி, ஜி.எம் அறைக்குப் போனவள்,

“சார் நான் கிளம்பறேன்” என்றவளிடம், அவசரமாக ஒரு பைலை நீட்ட, அதைக் கையை நீட்டி வாங்கியவளின் கையை டக்கென்று மோகன் பிடிக்க, திடுக்கிட்டுப் போனவள் அவனின் தீண்டலில் கோபப்பட்டுக் கையை உதறி, நிமிர்ந்து அவனை எரித்துவிடுவதுபோல் பார்த்தாள்.

“இந்த வேலையெல்லாம் எங்கிட்ட வச்சுக்கிடாதீங்க. அப்புறம் நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது” என்ற காட்டமாகக் கூறி, படபடவெனக் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றாள். தனது கேபினைத் திறந்துகொண்டு ஹேண்ட்பேகை மாட்டியவள் தனது ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு விறுவிறுவென்று வேகமாகப் பறந்தாள். நடந்த விசயத்தைத் தனது தோழியிடம் கூற,

“இனிமேல் அந்தாளு வாலாட்ட மாட்டான்பாரு. நீ பயப்படுவியா என்று பார்த்திருப்பான். நீ கோபப்பட்டுப் பேசுனதால, பயப்படமாட்டான்னு தெரிஞ்சிருக்கும். நாளையிலிருந்து ஒழுங்கா இருப்பான். நிம்மதியாயிரு. எதைப்பத்தியும் யோசிக்காத” என்றாள்.

மறுநாள் ஆபிஸ் வந்த கார்குழலியை ஜி.எம் அடிக்கடி கூப்பிடவும் இல்லை, எதுவும் நடந்த மாதிரி காட்டிக்கொள்ளாததால் நிம்மதியடைந்தாள். இப்படிப்பட்ட குள்ளநரி புத்தியுடைய ஆண்கள் எங்கு போனாலும் இருப்பார்கள், இவர்கள் நம்மிடம் அத்துமீறாமல் இருக்க நாம்தான் நம்மைச்சுற்றி முள்வேலியை அமைத்துக்கொள்ளவேண்டும் என உணர்ந்தாள்.



## மூசா விஜிலி, மருதமுனை

*கோடையில் ஒரு புள்ளிக்குயில்
எரிதணல் கொதி கொள்ளும் வேக்காட்டில்
உச்சந்தலையில்
கசிவு கொள்கிறது சூரியன்
மண்ணுக்குள் வேர்கள் மட்டும்
உயிர் வாழ்வதால் தானே
கிளைகளில் சொட்டும் ஈரம் இருக்கிறது
இலைகள் உதிரும் வலியால்
வெண்பூக்களில் ஊடல்
இன்றி
உயர இரைந்து
மீளவும் பூமிக்குத் திரும்புகிறது வண்டு
சூரிய பந்தின் நெருப்பு விளையாட்டினால்
வெற்றுப் பாதங்களில்
வலி கொண்டன வெயில் கோடுகள்
இவைகள் கடந்த பின்னும்
இனி எதற்குத் தான்
நனையக் காத்திருக்கிறதோ
பனி கொட்டும் ரகசியம்
இத்தனைக்கும்
உச்சிக்கொப்பிலிருந்து
குரல் தடுமாறியபடி கூவிக் கொண்டிருக்கிறது
ஒரு புள்ளிக் குயில்..!*

*10//03//2024*
*நன்றி:முகநூல்*

## ச. சத்தியபானு

*சலிப்படையும் நாட்களில்
படபடக்கும் சிறகுகளால்
வலை விரித்து அழைக்கிறது
வானத்து
பட்டாம்பூச்சிகள்
ஒவ்வொரு முறையும் திரும்பி
பார்க்கையில் வாழ்க்கையின்
சிறகுகளால் கடலளவு வட்டமிட்டு
அதான் வழி பறப்பது
போல பறக்கிறது ஒவ்வொருவரின்
ஆழ்மன சிறகுகள்
கூண்டியிட்ட பறவையாய்
மறையும் ஒவ்வொரு
சிறகுகளுக்கு புதிய
சிறகுகளாய் தந்து
விட்டு செல்கிறது சில
இலையுதிர் கால பறவைகள்...*



# என்றும் பதினாறு

கே.எஸ்.சுதாகர்

## நான்கு பாத்திரங்கள் :

*ரவிச்சந்திரன், மோகன், இளம் பெண், முதியவர் (இளம்பெண்ணின் தந்தை)*

❍

## காட்சி 1

*வெளி*

*ஒரு புற நகரம்*

*இரவு*

*ஒரு புறநகரப் பகுதி. மழை தூறிக் கொண்டிருக்கின்றது. ஒரு சில வாகனங்கள் வீதியில் போய்க் கொண்டிருக்கின்றன. மோகன், ரவிச்சந்திரன் என்ற இரண்டு இளைஞர்கள்/ நண்பர்கள் ஒரு காரில் போய்க் கொண்டிருக்கின்றார்கள். ரவிச்சந்திரன் காரை ஓட்டுகின்றான். மெல்லிய இசையில் சினிமாப்பாடல் ஒலிக்கின்றது. கார், பஸ் ஸ்ராண்ட் ஒன்றைக் கடக்கின்றது. யாரோ ஒரு இளம் பெண் பஸ் ஸ்ராண்டிற்குள்ளிருந்து வெளியே வந்து காருக்குக் கை காட்டுகின்றாள். 'ஸ்றீற் லாம்பின்' வெளிச்சத்தில் அவள் ஒரு பள்ளி மாணவி போலத் தெரிகின்றாள்.*

*ரவிச்சந்திரன் : ஏய் மோகன்... பள்ளிக்கூடப் பிள்ளை போலக் கிடக்கு. பஸ் இனி இந்தப் பக்கம் வருமோ தெரியாது. நேரமும் இருட்டிப் போச்சு. பாவம். என்னெண்டு கேட்டுக் கூட்டிக் கொண்டு போய் விடுவோமா?*

*காரின் வேகம் குறைகின்றது. மோகன் சற்றுத் தயங்கியபடியே தலையை ஆட்டுகின்றான். கார் றிவேர்ஷில் திரும்புகின்றது. அந்தப்பெண் – அழகான பெண் காரிற்குக் கிட்ட வருகின்றாள்.*

*மோகன் : எங்கே போக வேண்டும்?*

*பெண் : மில்பாங்க் றைவ்*

*ரவிச்சந்திரன் : எங்கடை இடத்திலையிருந்து ஒரு ஃபைவ் மினிற்ஸ் றைவ் தான். கூட்டிக்கொண்டு போவம்.*

*மோகன் : சரி... ஏறுங்கோ*

*அந்தப் பெண், காரின் பின் புறக் கதவைத் தானே திறந்து ஏறிக்கொள்கின்றாள். (கார்க் கதவு மூடும் சத்தம்) / (அவளது முகம் க்ளோஸ் அப்பில் காட்டப்படுகின்றது. இளம் பெண். பதினாறு வயது இருக்கும்.)*

*கார் பிரதான வீதியில் இருந்து உள்ளே திரும்புகின்றது. வீதியின் ஒருபுறம் வீடுகளும், மறுபுறம் 'றிசேவ்' ஆகவும் இருக்கும். அறுபது எழுபது வீடுகள் கொண்ட இருண்ட பயத்தை ஏற்படுத்தும் 'நோ எக்சிற்' வீதி. பிரதானவீதியில் இருந்து உள் வீதியில் நுழையும் போது மழை பலக்கத் தொடங்குகின்றது. காரின் வானொலிச்சத்தத்துடன் மழை இரைச்சல் போட்டி போடவே மோகன் வானொலியை நிறுத்தி வைக்கின்றான். (சற்றே பயத்தை ஏற்படுத்தும் ஓசை, மழை பலக்கும் சத்தம்). இந்த இடத்தில் படத்தின் டைட்டில்கள் போடலாம்.*

*அந்தப்பெண் மோகனையும் ரவிச்சந்திரனையும் நோட்டம் விடுகின்றாள்.*

*மோகன் : ரவி... வாசனை ஒரே தூக்குத் தூக்குது...*

*ரவிச்சந்திரன் : உங்கடை பெயர் என்ன?*

*பெண் : (சத்தமில்லை)*

*மோகன் : நீங்கள் என்ன படிக்கிறியள்?*

*பெண் : (மௌனமாக இருக்கின்றாள்)*

*மோகன் : ரவி... உவள் குடிச்சிட்டு வந்திருக்கிறாள் போல கிடக்கு. அதுதான் ஒண்டும் கதைக்கிறாள் இல்லை. குடிச்ச மணம் போக பெர்வியூம் அடிச்சிருக்கிறாள். நீ ஒருக்கா காரை ஓரம் கட்டு...*

*ரவிச்சந்திரன் : இவன் இனிக் கிறுக்குத்தனம் பண்ணப் போறான். என்ன நடந்தாலும் இனிப் பிடிபடப் போறது நானும் தான்.*

*கார் ஒரு ஓரமாக 'ஹசாட் லைற்' போட்டபடி நிற்கின்றது. மோகன் மழைக்குள் இறங்கி, பின்புறக் கதவைத் திறந்து, உள்ளே ஏறி அந்தப் பெண்ணின் பக்கத்தில் அமர்கின்றான். அவளை முகர்ந்து பார்க்கின்றான். அவள் முகம் சுழித்து அழகு காட்டுகின்றாள்.*

*பெண் : கடைசி வீடு... (சொல்லிவிட்டு தலை குனிந்தபடி இருக்கின்றாள்.)*

*மோகன் திரும்பவும் காரில் இருந்து இறங்கி வந்து, முன்னாலே ஏறிக் கொள்கின்றான்.*

*மோகன் : எடு காரை. குடிச்சிருக்கிறாளா எண்டு அவளை நான் முகர்ந்து பாத்தன். ஆனால் அவள் குடிக்கேல்லை. நல்ல பிள்ளை. அச்சாப் பிள்ளை.*

*வீதியில் இரண்டொரு வீடுகளில் மாத்திரம் விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. கடைசி வீடு 'வெதர் போர்ட் ஹவுஸ்'. வீடு வெளிச்சமின்றி இருண்டு கிடக்கின்றது. கார் நிற்கின்றது. பெண் இறங்குகின்றாள்.*

பெண் : தாங்ஸ்... *bye*

மோகன் & ரவிச்சந்திரன் : *Bye*

*பெண் கேற்றைத் திறந்து கொண்டு உள்ளே செல்கின்றாள். கேற் கிரீச் என்று ஓசை எழுப்புகின்றது. மோகனும் ரவிச்சந்திரனும் காருக்குள் இருந்து அவள் போவதைப் பார்த்தபடி இருக்கின்றார்கள். கேற் ஓவென்றபடி திறந்து கிடக்கின்றது. சற்று நேரத்தில் வீடு வெளிச்சம் போடுகின்றது. இவர்கள் காரை 'U' ரேணில் திருப்பி போகின்றார்கள்.*

*கார் சிறிது நேரம் ஓடுகின்றது. தற்செயலாக காரின் பின் இருக்கையைத் திரும்பிப் பார்க்கின்றான் மோகன். அங்கே அந்தப் பெண் இருந்த இடத்தில் ஒரு 'ஸ்காவ்' (scarf) இருக்கின்றது. (ஸ்காவ் க்ளோஸ் அப்பில் காட்டப்படுகின்றது)*

மோகன் : டேய் ரவி... கிளி ஸ்காவை விட்டிட்டுப் போட்டுது. திருப்பு காரை. குடுத்திட்டுப் போகலாம் *(பதட்டத்துடன்)*

*கார் திரும்பி மீண்டும் பெண் வீட்டுக்குப் போகின்றது. அவர்கள் வீட்டு 'லைற்' எரிந்து கொண்டிருக்கின்றது. 'கேற்' ஓவென்று திறந்திருக்கின்றது. சருகுகள் காற்றில் அலைக்கழிக்கப்படுகின்றன. இருவரும் உள்ளே சென்று கதவைத் தட்டுகின்றார்கள். (கதவை மெலிதாகத் தட்டும் சத்தம்) வீட்டினுள் இருந்து குரல் ஒலிக்கின்றது. உள்ளிருந்து ஒரு மனிதர் நடந்து வரும் காலடிச்சத்தம். ஒரு முதியவர், எழுபது எழுபத்தைந்து வயதிருக்கலாம், கதவைத் திறக்கின்றார்.*

மோகன் : கொஞ்ச நேரத்துக்கு முன்னாலை – ஒரு பெண்ணைக் காரில் கொண்டுவந்து இங்கே இறக்கி விட்டோம். அவள் இந்த ஸ்காவை மறந்துபோய் எங்கடை காருக்குள்ளை விட்டிட்டாள்.

*மோகன் அந்த ஸ்காவை முதியவரிடம் நீட்டுகின்றான்.*

முதியவர் : அவள் என்னுடைய மகள் தான். உள்ளே வாருங்கள்.

*முதியவர் இருவரையும் உள்ளே கூட்டிச் செல்கின்றார்.*

## காட்சி மாற்றம் 2

*உள்*

*முதியவரின் வீடு*

*இரவு*

*உள்ளே மங்கலான வெளிச்சம். வீடு அலங்கோலமாகக் கிடக்கின்றது. சுவர்க்கடிகாரத்தின் ஒலியைத் தவிர வேறு சத்தம் இல்லை. சுவரில் மனைவி, மகளின் படங்கள் தொங்குகின்றன.*

ரவிச்சந்திரன் : எழுபது வயது முதியவருக்கு பள்ளி மாணவி வயதில் மகளா? *(மோகனின் காதுக்குள் கிசுகிசுக்கின்றான்)*

முதியவர் : இந்தப் படத்தில் இருப்பவள் தானே! *) சுவரில் தொங்கும் படத்தைச் சுட்டிக் கேட்கின்றார்*

மோகன் : ஓம்...

முதியவர் : அவள் என்னுடைய மகள் தான். தனது பதினாறு வயதில் கார் அக்ஷிடென்ற் ஒண்டில் இறந்து போனாள். முப்பது வருஷங்களுக்கு முந்தி அவள் பள்ளிக்கூடம் போகேக்கை நடந்தது. அப்ப அவள் காருக்குள்ளையிருந்து ஸ்காவ் பின்னிக் கொண்டிருந்தாள்.

*முதியவரை, ரவிச்சந்திரனும் மோகனும் மேலும் கீழும் பார்க்கின்றனர். ரவிச்சந்திரன் பயந்தபடியே பின்புறமாக அடியெடுத்து வைக்கின்றான். (பயத்தை ஏற்படுத்தும் ஓசை)*

முதியவர் : இப்பிடித்தான் இடைக்கிடை காரில் ஏறி இங்கே வந்துவிட்டுப் போவாள்.

*மோகன் சுவரில் தொங்கிய அந்தப் பதினாறு வயதுப் பெண்ணின் புகைப்படத்தை மீண்டும் பார்க்கின்றான். அது ஒருதடவை அவனைப் பார்த்துக் கண் சிமிட்டுகின்றது. ரவிச்சந்திரனைப் பார்க்கின்றான். அவன் அங்கு இல்லை. அவன் முன்னதாகவே ஓடிச் சென்று கார் கதவின் பக்கத்தில் நிற்கின்றான்.*

மோகன் : போய் வருகின்றேன். *(சொல்லிவிட்டு முதியவரின் பதிலுக்குக் காத்திராமல் அவசர அவசரமாக வெளியேறுகின்றான்)*


முதியவர் : நல்லது. போய் வாருங்கள்.

*மூச்சிரைக்க பயக் கலக்கத்தில் வெளியே வருகின்றான் மோகன். காரடியில் ரவிச்சந்திரன் காரின் கதவைத் திறந்தபடி நிற்பதைப் பார்க்கின்றான்.*

மோகன் : ரவி... எடு காரை. சீக்கிரம்.

*ரவிச்சந்திரன் மோகனது காற்சட்டையைப் பார்க்கின்றான். அது ஈரமாக நனைந்திருக்கின்றது. மோகன் பயத்தில் சிறுநீர் கழித்துவிட்டான் என்பதைக் கண்டுகொண்டான் ரவிச்சந்திரன். கார் கிரீச்சிட்டபடி விரைந்து புறப்படுகின்றது.*

# த. ரவீந்திரன் கவிதைகள்



## மௌனத்தின் பாரம்

*இரவின் நுனியில்*
*உறங்கும் அதிகாலை*
*நிலவின் முதுகில்*
*மௌனத்தின் பாரம்*
*நீ ரசிக்காத கவிதையின்*
*உயிர்ப்பில்.!*

❍

## சொல்லாத சொல்லின் நில்லாத பாரம்

*இருவரும் ஒன்றாக பயணிப்போம்*
*பள்ளி செல்ல பாதையும் அத்தனை*
*எளிதாக முடிவதில்லை*
*அப்போதெல்லாம் என் வாகனத்தின்*
*பின்னால் அமர்ந்திருக்கும் கணம்*
*கண்ணாடியில் காட்டும் கண்ணழகை*
*படம் பிடித்து கொள்ளும் மனம்*
*மௌனத்தில் திளைத்திருக்கும்*
*இதழ்களின் படபடப்பில்*
*சிகரத்தின் துடிதுடிப்பு*
*தூரம் குறைந்து பிரியும் பொழுது*
*எங்கள் பிரியத்தின் மொழியில்*
*நான்கு விழிகளிலும் உவர்ப்பு*
*உருண்டோடிய காலத்தின் கைப்பிடியில்*
*தொலைந்து போயிருந்தோம்...*
*நீண்ட வருடத்திற்கு பிறகு பார்த்தேன்*
*ஊர் திருவிழா கூட்டத்தில்*
*நின்றிருந்த நிழலில் நிழலாடியது*
*அழகிய பால்யத்தின் பயண சுகந்தம்*
*சொல்லாத சொல்லின் நில்லாத*
*பாரம் ஏதேதோ எண்ணத்தில்*
*நகர்ந்த அந்நொடியில்*
*இருவருக்குள்ளும் காதலின்*
*காட்சிப் பிழைகள்..*

❍

## வெற்றி தோல்வி மறந்து..


*மாமியாரை மருமகளும்*
*மருமகளை மாமியாரும்*
*மாறி மாறி வெட்டிக்கொண்டனர்*
*தாயம் விளையாட்டில்*
*இருவருக்குமிடையில் கடும் போட்டி*
*யார் அடுத்த மலையை*
*கைபற்றுவதில் காய்களை நகர்த்தி*
*கோட்டை பிடிக்கும் முயற்சியில்*
*பகடையை உருட்டும் உருட்டில்*
*உலகம் இருண்டது போல்*
*நின்றிருக்கிறேன் பசியோடு*
*தங்களுக்கான விளையாட்டில்*
*பசியை மறந்திருந்தனர் என்னையும்*
*சேர்த்து வெற்றி தோல்வி மறந்து*
*சமரசத்தோடு மீண்டும் தொடங்கியது*
*அடுத்த ஆட்டம்..!*


## அப்துல் சத்தார். (பாளையங்கோட்டை)

*செந்தணல் என கூறிடில்
வாயும் வெச்திடுமோ....
மனதை துலக்க
மரணத்தைப் பாடுதலும் நன்றே.
புள்ளியை வைப்பவன் மனிதன்
அதில் கோலம்
போடுவதெல்லாம் இறைவன்....
பிறப்பு முதற்புள்ளி எனில்
இறப்பு முற்றிப்புள்ளி அன்றோ...
மரணமெனும் விதி அழைத்திட
ஆத்தாள் அப்பன்
அன்பாய் இட்டழைத்த
பெயரும் மறைந்து
'அது'வென ஆகிப்போனேன்....
இன்பம் தந்து ஆதரவாய் தாங்கிய
இணையாளும் மருகி கலங்கிட...
பெற்ற மகள் அருகிலிருந்து
அரற்றி அழுதிட...
நேசம் வைத்த நெஞ்சங்களாம்
உறவுகளும் நட்புகளும் விடை தர...
அன்று மோகத்தோடும்
ஆசையோடும்
ப்ரியமானவர்களுக்குச் சூடிய
மல்லிகைச்சரங்கள்
இன்று மேனி தழுவிய
வெண்வெற்றாடையெங்கும்
வாசனை நல்கி நிறைந்திட...
இன்னிசைபண் பாடி
இசைத்திருந்த
இல்லம் அகன்று
வீதி ஏகியே....*

*நிரந்தர நித்திரைகொள்ள
நிலமதை அடைந்தேன்...
அன்னையவள் ஆனந்தம் கொள்ள
தந்தையும் மற்றையோரும்
மகிழ்ச்சியில் திளைக்க...
விழி மூடி அழுதபடி...
இவ்வையகம்
உதித்த நான்...
பிறர் அழவே
இறுதியாய் விழி மூடி
மண் புதைந்தேன்....
காலப்பறவையின்
சிறகுக்குள் நான்....
உடல் இழந்தேன்.
உயிர் இழந்தேனா...?
உடலால்
'நான்'என இருந்தேன்...
உடல் மட்கி மறைய
சூன்யமென ஆகி
உயிர்போன பாதை
உணர்ந்தேன்....
நேசம் வைத்த நெஞ்சங்களை
அவர்தம் உரு கண்டு
அறிந்துகொள்வேனா...?
அல்லால்
ஆன்மா சேகரித்து வைத்த
அழியாத நினைவுகளால்
அறிந்துகொள்வேனா...?*

*(நன்றி:அநாமிகா ரிஷி)*






# மயிலான்

G. சியாமளா கோபு

**ம**யிலான் வாசல வாசல பாத்துட்டு இருந்தது

“இன்னும் போனவங்களை காணோம். எப்ப வருவாங்கன்னு தெரியல. காலையிலே கிளம்பி போனவங்க, தனியா போகலாம்ல்ல, அதை வுட்டுட்டு, கூடவே இந்த தங்கம்மாவையும் கூட்டிட்டு போய்ட்டாங்க”ன்னு மயிலான் மனசுக்குள்ள மறுகிட்டு இருந்தான்.

தங்கம்மா என்ன செஞ்சா பாவம்ன்னு கேட்கக் கூடாது தான். ஏன்னாக்க, எப்ப பாரு, அவ இவன்ட்ட சண்டை போட்டுட்டே இருப்பா. எந்நேரமும், எதுக்கெடுத்தாலும், எது கேட்டாலும் சண்டை தான். அதுலயும் வாய் வார்த்தை வாயில இருந்தா பரவால்ல. அதை விட்டுட்டு மயிலானைக் கொத்தறதும், கால் நகத்தாலே பீர்றதும், அவன் திங்கும் பழத்தையும் கொட்டையையும் புடுங்குறதும், ரெக்கையை தட்டி, ஒசக்க ஒசக்க பறந்து, எரவானத்த முட்டித் திரும்பறதும், ஒரு மாதிரி கோபமா கத்துறதும்னு, பாக்கவே காளியாத்தா மாதிரி மயிலானை மட்டுமில்லாம வீட்டாளுகளையும் கிடுகிடுக்க வெச்சிருவா.

“அவளுக்கு யார்ட்ட கோபம் எதுக்கு கோபம்னு யாருக்குத் தான் புரியுது? எப்பவும் என்னாண்ட சந்தோஷமாத் தானே இருந்தா. இப்போ என்ன வந்திச்சுன்னு இப்படி மல்லு கட்டறான்னு” மயிலானுக்குப் புரியவேயில்ல.

என்ன தான் மயிலானும் தங்கம்மாவும் கிளிகளாக இருந்தாலும், எந்நேரமும் சிடுசிடு சிடுன்னு, கூட இருக்குறவங்க மேல விழுந்து பிடுங்கிட்டேயிருந்தால், வீட்ல இருக்கிறவங்க நிம்மதியாவா இருக்க முடியுமா? இல்ல அந்த வீடுதான் நல்லா இருக்குமா?

மயிலான் எவ்ளோ சொல்லி பாத்துட்டான். “தங்கம்மா, ரெண்டு பேரும் ஒண்ணா தானே இந்த வீட்டுக்குள்ள வந்தோம். நீ என்ன பண்ணினாலும் சகிச்சுக்கிட்டு போறேன்ல. நீ எதுக்கு கோபப்படுறன்னு” ஆதரவா அன்பா காதலா பாசமா பிரியமா சொல்லியும், இன்னும் என்னன்னவோ டக்கர் அடிச்சும் பாத்துட்டான்.

அப்பயும் அவ கோபம் குறைய மாட்டேங்குது. இங்க வந்த புதுசுல ரெண்டு பேரும் அம்புட்டு சந்தோஷமா அன்னியோனியமா இருந்தவங்க தான். கிக்கிக்கீன்னு சதா சிரிச்சிக்கிட்டு, ஒருத்தரை ஒருத்தர் விரட்டிப் பிடிச்சி விளையாடிக்கிட்டு, புதுசா கண்ணாலம் கட்டினவங்களாட்டி ஒருத்தரை விட்டு ஒருத்தர் இணை பிரியாம இருந்தவங்க தான்.

“இந்த தங்கம்மா எதுக்குத் தான் இப்படி மயிலான்ட்ட சண்ட கட்டுறான்னு தெரியலையே. என்ன காரணம்னு?” அம்மா கேக்குறாங்க.

“அவளுக்கு இப்பல்லாம் ரொம்ப கோவம் ஜாஸ்தியா வருது. சின்னதா ஒரே ஒரு குஞ்சு பொரிச்சிருந்தா கூட அவளுக்கு இவ்வளவு கோவம் வந்திருக்காது. அதை பாக்குறதுக்கே அவளுக்கு நேரம் சரியாக இருந்திருக்கும்” ன்னு அப்பா சொன்னாரு.

“யார் அவளை பெத்துக்க வேண்டாம்ன்னு சொன்னது? இவ்ளோ பெரிய வீட்ல இன்னும் ரெண்டு குஞ்சுக்கா இடமில்லாமல் போயிட போகுது? ன்னாங்க அம்மா.

சாதாரண பச்சைக் கிளியான மயிலானுக்கு அப்படித் தோணலை. ஒஸ்தி ரக வெளிநாட்டுப் பல வர்ண கிளியான அவளைப் பாத்த முத பார்வையிலேயே அவள் அழகுக்கு கிறங்கித் தான் போனான் அவன். அழகுன்னா அழகு. சாதா அழகில்ல. பேரழகு. வீட்டுக்கு வர்றவங்க எல்லாம் அவளைப் பாத்து, “ஏன்னா அழகு” ன்னு வியக்குற அளவுக்கு தங்கம்மா அழகாயிருப்பா. பச்சையும் நீலமும் கலந்த வால் மாதிரி நீண்ட ரெக்கை பட்டுப்புடவை மாதிரி பளபளக்கும். மூக்குல சிகப்பு நிறத்துல ரெண்டு பொட்டு தங்க மூக்குத்தி மாதிரி ஜொலி ஜொலிக்கும். “தான் உலக மகா அழகின்னு திமிர்ல தான் தன்னைக் கண்டா பிடிக்கலை, இந்த ஆட்டம் ஆடறா” ன்னு தோணும் மயிலானுக்கு.

“நாம முன்னாடி வளத்தினோமே வேலன்னு ஒரு சேவல், அவன் பொஞ்சாதி வேலாயியும் இப்படித்தான் அவனை மிரட்டிட்டே இருந்தா. அவளை என்ன பண்ண நீனு?” ன்னு அப்பா கேட்டாரு.

“தனித்தனியா பிரிச்சு வச்சு பார்த்தேன் அப்பயும் வேலனை கொத்தப் போவா வேலாயி. ரெண்டு பேத்தையும் கூண்டுலருந்து திறந்து வுட்டேன். ரெண்டு பேரும் ஒத்துமையா சந்தோஷமா திரிவாங்க. குப்பை கூளங்களெல்லாம் கீறி கிளறி இருக்கிற புழு பூச்சி எல்லாம் புடிங்கி தின்னு கிட்டு” ன்னு பழைய நினைப்புல சிரிச்சவங்க “ரெண்டு பேரும் சிரிப்பதும், இறக்கையை படக் படக்குன்னு அடிச்சுகிட்டு எம்பறதும், பார்க்கவே கண் கொள்ளாக் காட்சியா இருக்கும். ஒருத்தருக்கு ஒருத்தர் அவ்வளவு பாசமா இருந்தாங்க”ன்னு அம்மா சொன்னாங்க.

“வேலான்னு ஒரு குரல் குடுத்தா போதும். எங்கே இருந்தாலும் உடனே வந்து நிப்பான். கூடவே வேலாயியும் அவனை இடிச்சுக் கிட்டு ஓடி வந்து நிப்பா தெரியுமா”ன்னு அப்பா சிரிச்சாங்க.

என்னடா அவங்கள போய் அம்மா அப்பான்னு சொல்றானே இந்த மயிலான்னு நினைக்கிறீங்களா? என்ன பண்றது? நாயைத் தானே நன்றியோட இருக்கும்னு பெத்தப் பிள்ளையைப் போல வளப்பாங்க மனுஷங்க. ஆனாக்க சில வூடுகள்ல ஜல்லிக்கட்டு காளைங்களை புள்ளை மாதிரி வளக்கறவுங்க உண்டு. ஆனா மயிலான் மாதிரி கிளியையும் தங்கம்மா மாதிரி கிளியம்மாளையும் கூட சொந்த பிள்ளைகளைப் போல வளக்குற பெற்றோர்கள காண்பது அரிதிலும் அரிது.

அம்மாம் பெரிய நடுவூட்டுல, ரெண்டு பேரும், ஆடுறதும், பாடறதும், டிவி பெட்டியில், பாட்டு காட்சி வந்தா கூடவே மயிலான் விசில் அடிப்பதும், சண்டை காட்சி வந்தா, ரெண்டு பேரும் கீச் கீச்சுன்னு கத்தறதும், ஒரே அக்கப்போர் தான். அம்மா யாரோடும் போனில் பேசக் கூடாது. அவுங்க ரெண்து பேத்துக்கும் பிடிக்காது. இது எப்படி இருக்கு! ரெண்டு பேரும் சத்தம் போடுவங்க. அதனால யார்ட்டையும் ரெண்டு வார்த்தை போன்ல முழுசா பேச முடியறதில்ல. சொந்தகாரவுங்களும் போனை எடுத்ததுமே, “என்னம்மா உன் பிள்ளைங்க எப்படி இருக்காங்க?” ன்னு கேக்கற அளவுக்கு ரெண்டு பேரும் குடும்ப உறுப்பினர்களாகவே ஆகிட்டாங்க. ரேசன் கார்டுல பேர் குடுத்து, ஆதாரையும் எடுத்துடும்மான்னு அவுங்க வீட்டு தம்பு கேலி பண்ணுவான். ஏழு மணியாச்சுன்னா நடு வீட்ல, விளக்கை அணைக்க சொல்லி கூப்பாடு போடுவாங்க. என்னடா உங்களோடன்னு அலுத்துக் கிட்டாலும், சத்தம் தாங்காம விளக்கை அணைச்சிட்டு இருட்டுலய நடப்பாங்க அப்பாவும் அம்மாவும். ஒரு வழியா ஒரு கூண்டை செஞ்சி ரெண்டு பேத்தையும் அதுல போட்டு சுத்தி மறைப்பா பேப்பரை ஒட்டி இருட்டாக்கிட்டாங்க. மனுஷங்க மாதிரி இவுங்களுக்கும் இருட்டும் மறைப்பும் தேவையாயிருக்குன்னு அம்மா சிரிச்சாங்க. கிளியோ மனுஷனோ, யாராயிருந்தா என்ன? உலகத்துல இருக்குற எல்லா ஜீவராசிகளுக்கும் காதல் இயற்கையானது தானே!

அவங்க வீட்ல மக வயித்துப் பேத்தி பொறந்துச்சு. அவள நல்லா குளிக்க ஊத்தி, பவுடர் போட்டு, நடுவூட்ல சாமிப் படத்துக்குக் கீழே கிடத்தி, “ஓ கொச்சு, நன்னாயிட்டு குளிச்சி பொட்டிட்டு மையிட்டு கிடக்குன்ன கிடப்பைப் பாரு” ன்னு அம்மா கொஞ்சினா கூடவே இவுங்க ரெண்டு பேரும் அதை கீக்கீக்கீன்னு வழி மொழிவாங்க.

“குட்டி மயிலு, உன்னை அண்ணனும் அண்ணியும் எப்படி கொஞ்சுறாங்கன்னு பாரு”ன்னு அப்பா பேத்திட்ட சொல்றதை கேக்கற வீட்டு விருந்தாளிகளுக்கு விசித்திரமாயிருக்கும். சிலர் கண்ணுக்கு மறைவா, உக்கும்..அண்ணனாம் அண்ணியாம்னு தவடையை தோள்ல இடிச்சிக்கிறதும் உண்டு.

மயிலான் பேத்திக்கு டான்ஸ் ஆடிக் காமிப்பான், பாட்டு பாடுவான். விசில் அடிப்பான். இவன் பண்ற சேட்டை எல்லாம் பாத்துட்டு தங்கம்மா சண்டைய மறந்துட்டு ஒரே சிரிப்பா சிரிக்க, அவ சிரிக்கிற சிரிப்புல, குழந்தை திரும்பி பாக்க ஆஹா தங்கம்மா குஷியாயிட்டான்னு புரிஞ்சுகிட்டு, இவன் பாப்பாவை வுட்டுட்டு தங்கம்மாட்ட பல்டி அடிக்கிறது பாட்டுப் பாடறதுன்னு ரொம்பவே நாடகம் போட, அதை

தங்கம்மா பாத்து இன்னும் சிரிக்க, தங்கம்மாவோட சிரிப்பு சத்தம் கேட்டு பாப்பா பதிலுக்கு சிரிக்க, மூணு பேரும் ஒரே சிரிப்பு, அட்டகாசம், பார்க்கிறவங்களுக்கு, கிளிங்க எது மனுஷங்க எதுன்னு வித்தியாசம் இல்லாத தெய்வ சன்னிதானம் மாதிரி இருக்கும். மூணுமே ஒரே ஜீவராசியாத்தானிருக்கும். அன்பு இருக்குற இடத்துல மகிழ்ச்சி இருக்கும். மகிழ்ச்சி இருக்குற இடத்துல சிரிப்பு இருக்கும். சிரிப்பு இருக்குற இடத்துல தெய்வம் இருக்கும்னு அந்த காலத்துல பெரியவங்க சும்மாவா சொன்னாங்க!

குழந்தைகளும் பறவையைப் போல தானே! சின்னக் குழந்தை தெய்வத்துக்கு சமம். இந்த உலகமோ இயற்கையோ தெய்வம் போல தானே மாசு மரணம் இல்லாதது. அதனால அவங்களுக்கு அன்பை

மட்டும் வெளிப்படுத்த தெரியும்ங்குறது எவ்வளவு உண்மை. மூணு பேரும் சேர்ந்து அவ்வளவு

சந்தோஷமா இருந்தது அந்த வீடு

இப்போல்லாம் தங்கம்மா சண்டை போட்டா மயிலானும் கூட கூட சண்டை போட ஆரம்பிச்சிட்டான். பின்னே என்ன! அவனும் எத்தனை நாள் தான் பொறுத்துப் போவான். அவனுக்கு தான் ஒரு ஆம்பிள என்ற நெனப்பு திடீர்னு வந்துருச்சு. ஆமா ஊர்ல உலகத்துல இல்லாத பேரழகின்னு அவ மேல ரொம்பவே சலிப்பாயிட்டான். அதுவும் சரி தான். எதுக்கும் யாருக்கும் உதவாத அழகு இருந்தென்ன பிரயோசனம்? ஒரு நாள் மயிலான் தங்கம்மா ரெண்டு பேர் சண்டையும் ரொம்பவே உக்கிரமாயிருச்சு. அம்மாவும் அப்பாவும் எவ்வளவோ சமாதானம் செஞ்சிப் பாத்தாங்க. திட்டினாங்க. கண்டிச்சிப் பாத்தாங்க. ஊஹூம். அப்பயும் சரியாவலை. ரெண்டு நாளா கர் புர்ன்னு தான் போயிட்டு இருந்தது.

வேற வழி இல்லாம, "வேலனையும் வேலாயியையும் கூட்டை திறந்து விட்டதைப் போல இவங்களையும் கூண்டை திறந்து விட்டா, போய் கொஞ்சம் வெளியில் காத்தாட நடந்தாங்கன்னா சந்தோஷமா இருப்பாங்க" ன்னு அம்மா சொல்ல,

"சரி அப்படித் தான் செஞ்சு பார்ப்போம்" ன்னு சொல்லி அப்பா கூண்டைத் திறந்து விட்டாங்க.

கூண்டை திறந்து விட்டதுமே தங்கம்மா அதுக்குன்னே காத்துட்டு இருந்ததைப் போல உடனே சர்ருன்னு வெளியே போய்ட்டா. அதுக்கு நேர்மாறா, மயிலானை "வெளியே போடா" ன்னு புடிச்சி தள்ளி விட வேண்டியதா போச்சு.

"குடுக்கறதைத் தின்னுப்புட்டு, கூண்டுக்குள்ளேயே குந்தியிருந்து சோம்பேறியா போயிட்டான் மயிலுன்னு" அப்பா சொல்ல,

"கிளியானாலும் ஆம்பளையானாலும் வூட்டுக்குள்ளேயே குந்தியிருந்தா எந்த பொம்பிளைக்குத் தான் பிடிக்கும்" னு அம்மா கேட்டாங்க. நெசம் தானே!

மயிலான் வீட்ட சுத்தி, தத்தி தத்தி நடந்து, கொத்தி கொத்தி தின்னு, மண்ணை கிளறி, ஏதோ பண்ணிட்டு இருந்தான். "சரி ரெண்டு பேரும் இங்க தானே இருக்காங்கன்னு" அப்பா வெளியே போயிருக்க, அம்மா கொஞ்சம் கண்ணை அசந்த மதிய நேரத்துல,. பாதுகாப்பா இருக்குற வூட்டை வுட்டுட்டு, வுட்டா போதும்னு சில பொண்ணுங்க மாயையை நம்பி வீணாய் போவதைப் போல தங்கம்மா பக்கத்து வீட்டுக்கு பறந்துட்டா. வெளி உலகத்துல, வட்டமிடும் வல்லூறுகளும் கொத்திப் பிடுங்கித் தின்னும் பருந்துகளும் இருக்குங்குறத, பொம்பள புள்ளைங்க மறந்து போயிடுற மாதிரி இவளுக்கும் பக்கத்து வீட்ல நாய் இருந்தது தெரியாம போயிருச்சு.

இவளைக் கண்டதும் அவுங்க வூட்டு நாய் லொள்ளு லொள்ளுன்னு பிடிச்சு தின்னறதுக்கு விரட்டிட்டு இருந்துச்சு. தங்கம்மா ரொம்ப பயந்து போயிட்டா. வீட்டை விட்டு வந்தது தப்புன்னு புரிஞ்சுப் போச்சு. வீட்டுக்கு வந்துறலாம்ன்னு காம்பவுண்ட் சுவத்து மேல ஏறுவதற்கு முயல, அவளோட ரெக்கையோட முனையை பிடித்து நாய் இழுக்க, தங்கம்மாளோ கீக்கீக்கீன்னு பெருங்குரலெடுத்து படபடத்து கதற, நல்ல வேளை அந்த வீட்டு அம்மா பாத்துட்டு நாய விரட்டி வுட்டு கிளியைத் தூக்கி காம்பௌண்ட் சுவத்துக்கு மேல உட்டுட்டாங்க.

"யாரு செஞ்ச புண்ணியமோ நல்லவேளை பொழச்ச தாயே"ன்னு ரெண்டு பேரையும் மறுபடியும் பிடிச்சு கூண்டுக்குள்ள வச்சுட்டாங்க அம்மா.

அவுங்க வூட்டு தம்புவுக்கு கண்ணாலத்துக்கு சேலம் எடப்பாடிப் பக்கம் பொண்ணு பாத்துட்டு வந்தாங்க பெரியவங்க. ஏக தேசம் இந்த இடம் தெகஞ்சிடும்னு பேசிக்கிட்டாங்க. ஆனா என்ன காரணமோ கல்யாணம் குதுறலை.

"இந்த வூட்ல கிளிங்களுக்குக் கூட ஒரு குஞ்சு வைக்கலை. இதுல எங்கேருந்து என் தம்பிக்கு பொண்ணு அமையறது?" ன்னு தம்புவோட அக்கா சொல்லி வருத்தப்பட்டிச்சி.

ஒருநாள் காலையில ரொம்பவே உர்ருன்னு இருந்தா தங்கம்மா. மயிலான் என்ன கெஞ்சியும் அசையாம உக்காந்திருந்தா. ரெண்டு பேருக்கும் என்ன வாக்குவாதமோ மனஸ்தாபமோ! சண்டை கூட போடாம அமைதியா இருக்காளேன்னு ஆச்சரியமா இருந்தது. திடீர்னு கீச்கீச்ன்னு கத்திட்டு இருந்தா. மயிலானும் பதிலுக்கு சண்டை போடவே தங்கம்மா விஷ்க்ன்னு பறந்து போய் பின்னாலேயிருக்கிற தண்ணித்

தொட்டியில பப்பரக்கான்னு விழுந்துட்டா. அவளைக் கண்ணே மணியேன்னு கொஞ்சி கெஞ்சி சரி பண்ண தடுமாறிப் போய்ட்டாங்க பெரியவுங்க.

“ஊஹூம். இவளை வெச்சிக்கிட்டு சரிபடாது. நாம வீட்ல இல்லாதப்போ இதை மாதிரி ஏடாகூடமா ஏதாவது செஞ்சிக்கிட்டா என்ன பண்றது” ன்னு கவலைப்பட்டாங்க. வேற வழி இல்லாம சந்தையில அமீது பாய்ட்ட வுட்டுட்டு இன்னொரு கிளிய கூட்டிட்டு வரப் போயிருக்காங்க.

இந்த வூட்டு தம்பு சொல்லிச்சு. “யம்மா அமீது பாய், நாட்டு வைத்தியர்ட்ட தங்கம்மாவைக் குடுத்துடப் போறாரு. மூட்டுவலிக்கு கிளி ரத்தம் நல்லா கேக்கும்னு அவரு அறுத்துட கிறுத்துடப் போறாரு” ன்னு வெசனப்பட்டது பாவம்.

கிளி ரத்தம் மூட்டுவலிக்கு கேக்குமா என்ன? நெசமாவா?

தங்கம்மாவைப் போல ஒசத்தியான வெளிநாட்டு அழகான கிளியா இல்லாம மயிலான் தனியா இருப்பானே, அவனுக்கு ஒரு துணை வேணுமே பாவம்னு சாதாரண கிளியம்மாவ கூட்டிட்டு வந்தாங்க பெரியவுங்க. ஆனாலும் மயிலான் அந்த புதுக்கிளிய ஏறெடுத்தும் பாக்கலை.

“மயிலான் இதோ பாரு. இதுவும் தங்கம்மா தாண்டா” ன்னு புதுக்கிளிக்கு தங்கம்மான்னே பேரு வெச்சிட்டாங்க.

அந்த கிளிக்கு முன்னே இருந்த வீட்ல என்ன பேரோ? இவுங்க வெச்ச புதுப் பேரான தங்கம்மாவுக்கு அது திரும்பிப் பாக்கறதில்ல. ஒன்னு ஒசத்தி மத்ததொன்னு மட்டம்னு ரெண்டும் ரெண்டாப்பை, ரெண்டாப்பையும் கழண்டாப்பைன்னு ஏட்டிக்கிப் போட்டியா இல்லாம ரெண்டும் ஒன்னு போல இருந்தா சண்டை வராதுன்னு யாரோ சொன்னாங்களாம் அவுங்களுக்கு.

புதுசா வந்தவ சாப்பிடுறது இல்ல பேசுறது இல்ல. புதுசா கல்யாணம் கட்டிக்கிட்டு வந்த புது பொண்ணு மாதிரி என்னவோ கோவிச்சுக்கிட்டு ஒக்காந்துட்டு இருந்தா.

“காலைல இருந்து தங்கம்மா ஒன்னுமே சாப்பிடலடா மயிலான், என்னன்னு கொஞ்சம் கேக்க

கூடாதாடா”ன்னு அம்மா சொல்ல, தங்கம்மான்னு பேரைக் கேட்டதும் மனசு இளகிப் போச்சு மயிலானுக்கு. உடனே பழைய டெக்னிக் படி அவளுக்கு டான்ஸ் ஆடி, பாட்டுப் பாடி, விசில் அடிச்சு, பல்டி அடிச்சிக் காமிக்கிறதுன்னு அவ கவனத்தைக் கவர, என்னன்னவோ டக்கரடிச்சிப் பார்த்தான் மயிலான். அப்பயும் அவ அசையவேயில்ல. இப்படியே போயிட்டு இருந்தது இவங்களுடைய காலம். ஆண்டாண்டு காலமா ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே இருக்கும் ரசாயனம் மயிலான் தங்கம்மா மத்தியில வராமலா போய்டும்? அப்புறம் என்ன? இப்ப ரெண்டு பேரும் சேர்ந்து ஒரே சிரிப்பு தான். கூத்து தான். கும்மாளம் தான். நாலு முட்டை வச்சதுல ரெண்டு குஞ்சு பொரிச்சு இன்னும் ரெண்டு முட்டை குஞ்சு வெளியே வர காத்துக் கிட்டு இருக்கு.

அவுங்க வூட்டுத் தம்புக்கு கல்யாணம். இந்த தடவை பொண்ணு தேனி பக்கம். வீடே அமர்களப்பட்டது. “இவுங்க வூட்ல மயிலானுக்கும் தங்கம்மாவுக்கும் குஞ்சு பிறந்த ராசி, நாலு வருஷமா பொண்ணுத் தேடிட்டுருந்த அந்த வீட்டு தம்புக்கு கண்ணாலம் ஆச்சு” ன்னு அவுங்க மட்டுமல்லாம சொந்த பந்தம் முச்சூடும் சொல்லி பூரிச்சிப் போனாங்க.

புது பெஞ்ஜாதியோட வீட்டுப்படியில காலெடுத்து வைக்கும் போது ஆரத்தி சுத்தறதுக்கு முந்தி மயிலான் தங்கம்மாவோட சிரிப்பு சத்தம் பொண்ணை வுட்டுட்டு போக வந்திருந்த சொந்தகாரவுங்களுக்கும், புது சம்பந்திகளுக்கும் சிரிப்பைத் தர, அந்த இடமே, ஒரு பைசா செலவில்லாமல் ரொம்பவே குதூகுலமாயிருந்தது.

ஜீவ ராசிகளே இந்த வூட்ல சந்தோஷமாயிருக்கும் போது எம்மவளும் இங்கன ஒரு குறையுமில்லாம இருப்பான்னு புள்ளையை விட்டுட்டு நிம்மதியா திரும்பிப் போனாங்க பொண்ணு வூட்டுக்காரவுங்க. கல்யாணப் பொண்ணும் சந்தோஷமா புருஷன் கையைப் பிடிச்சிக்கிட்டு சிரிச்சிக்கிட்டே வூட்டுள்ளாற வந்தது.

ஆங். அது சரி. தங்கம்மா என்ன ஆனா தெரியுமா?


“ஒரு குளு குஞ்சு கூட வைக்காத நம்மை வெச்சிக்கிட்டு நம்ம அம்மா அப்பா என்ன செய்வாங்க? நம்மளாலே தான் தம்புவுக்கு கண்ணாலம் ஆவலை. அதுக்கும் மேலா நம்மளை ஆசையா பாசமா எந்நேரமும் சிரிக்க வெச்சிக்கிட்டு இருந்த மயிலான் என்ன பண்ணுவான். என்னாலே உனக்கு எந்த சந்தோசமுமில்ல, நான் எங்கன்னா போயிடறேன்னு சொன்னா, என் மேல உசுர வெச்சிருக்குற மயிலான் ஒத்துக்குவானா! வீண் சண்டை வலிச்சி நானு வீட்டை விட்டுட்டு போகவும் தானே, புதுசா ஒரு கிளியம்மா வந்தா. நாலு குஞ்சு பொரிச்சா. ரெண்டு பேரும் சந்தோஷமாயிருக்கக் கண்டி தானே வீட்டாளுகளும் சந்தோஷமாயிருக்காங்க. அவுங்க எல்லாரும் எப்பவும் நல்லாயிருக்கனும். அதிலும் குறிப்பா மயிலான் சந்தோசமா இருக்கணும்” னு நெனச்சிட்டு இருக்கா தங்கம்மா.

மனுஷனுக்கு மட்டுமா காதல்? உலகின் எல்லா ஜீவராசிகளுக்கும் காதல் பொதுவானது தானே! உலகில் வாழும் எல்லா உயிரினங்களிலும் மனுஷன் உட்பட உருவத்தில் பேதமிருந்தாலும் உணர்ச்சியில் பேதமில்லையே. படைச்சனிடத்திலும் எந்த பேதமுமில்லையே!

# புனைவிலக்கிய நதியில் நீந்தி (பேராசிரியர் பெ விஜயகுமார்)

**இளையவன் சிவா**

நூல் விமர்சனத்திற்கு என்று தனக்கென தனியானதொரு பாதையை அமைத்துக் கொண்டிருக்கும் பேராசிரியர் அவர்கள் ஒவ்வொரு நூலைத் தேர்வு செய்வதிலும் ஒரு தனித்துவத்தை நிலை நிறுத்திக் கொள்கிறார். சுற்றுச்சூழல் சிதைப்பு கல்விப் பிரச்சினை நிற இன மொழி சாதி பாலியல் பிரச்சனைகள் போன்ற சமூகக் கேடுகளை விவரிக்கும் நூல்களை மக்களுக்கு அறிமுகம் செய்து அதன் வழியே மக்களுக்குள் சிறிதளவாவது சிந்தனையைத் தட்டி எழுப்பும் வண்ணம் எண்ணத்தில் இவரது விமர்சனங்கள் முன்னேறுகின்றன.



இந்த நூலிலும் உலகெங்கிலும் புகழ்பெற்ற பல்வேறு புனைக்கதை எழுத்தாளர்களின் நாவல்கள் நாடகங்கள் என 16 நூல்கள் பற்றிய மதிப்புரை இடம் பெற்றுள்ளது. உலகத்தில் நடந்த வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கும் புனைவிலக்கியத்தை வாசிப்போருக்கு வரலாற்றின் வழியாகவும் எழுதப்பட்ட தருணத்தின் வழியாகவும் நமக்கு எடுத்தியம்புகிறது நூல்.

இயற்கை நதியில் நீராடுகையில் தேகத்தின் மாசுகள் நீக்கப்பட்டு தூய்மையாக்கப்படும். இலக்கிய நதியில் நீராடுகையில் மனங்களின் மாசுகள் கழுவப்பட்டு மாண்புகள் சேர்க்கப்படலாம். எழுத்தின் வழியே விளைந்திடும் புத்தக நதிகள் புறப்படும் இடம் தொடங்கி சென்றடையும் கரங்கள் வரை ஏந்திடும் எல்லோருக்குள்ளும் சிந்தனை முத்துக்களை எண்ண வைரங்களை என ஆனந்தப் புதையல்களை அள்ளி வழங்கியபடியே நகரும். பருவங்களின் மாறுதல்களால் பகலவனின் நெருப்பு கணைகளால் வற்றிப் போகாத புத்தக நதிகள் வாசிப்பவருக்குள்ளும் வற்றாத எண்ணங்களின் வழியே ஈரத்தை சுரக்க வைத்தே நகர்கின்றன.

புவியின் நகர்தலில் இயற்கையின் காலக்கணக்குகள் இம்மியளவும் பிசகாது பழுதில்லாமல் பயணத்தை தொடர்கையில் மனிதர்கள் மனங்களுக்குள் நொடிக்கு ஒரு தரம் மாறும் சிந்தனையின் ஓட்டங்கள். அவையே அன்பை விதைக்கும் கருணைகளாக மாறலாம் ஆயுதம் வளர்க்கும் வன்முறையை விதைக்கலாம் அடிமையாய் சக உயிர்களை மாற்றி ஆணவத்தில் ஆடலாம் மதச் சங்கிலிக்குள் தன்னை பிணைத்தபடியே மனிதர்களை எரித்தும் விளையாடலாம் தீவிரவாதத்தின் பிள்ளை என தேசத்தை துண்டாடலாம் அறியாமை மனங்களுக்குள் அறிவெனும் ஒளியை ஏற்றியும் காட்டலாம்.

இலக்கியங்கள் பிறந்திடும் பொழுதினில் எழுதுபவனுக்குள் ஒளிவிடும் ஏதோ ஓர் கருத்தும் பார்வையும் சமூகத்தின் இழிவுகளைப் போக்கிடவோ சமூகத்தை உயர் பாதையை நோக்கி நகர்த்திடும் கனவினை விதைத்திடவோ தூண்டிலிடும் சுடர்களாக மின்னத் தொடங்கும். தனக்கான மொழி வடிவில் தன்னுள் உணர்ந்தவற்றையும் கண்முன் நடந்தேறிய கசப்பும் இனிப்புமான வாழ்வின் ஊஞ்சலாட்டத் தருணங்களையும் கதையாகவோ கவிதையாகவோ நாவலாகவோ பிரசவித்து இளைப்பாறிக் கொள்கிறது பேரன்பின் மனம்.

சமூகத்தை தனது எழுத்து ஓரடியாவது முன்னோக்கி நகர்த்தி விடும் என்ற பேராசையே எழுதுபவனின் இதயத்தில் புகுந்து கொண்டு அவனை எழுத்தின் வழியே கரம் பிடித்து இழுத்துச் செல்கிறது. உலகத்தில் எங்கெல்லாம் ஒடுக்குமுறை நிலவினாலும் அடிமைத்தனமும் ஆணாதிக்கமும் அத்து மீறினாலும் சமத்துவம் குலைந்து இனமும் மதமும் மனிதனை இன்னலுக்குள் தள்ளினாலும் நிலம் பிளந்து வானை முட்டும் நீரைப் போல சட்டென வெடிக்கும் எரிமலையின் வேகத்தை போல புத்தகங்கள் பிறந்தே வினாக்களை எழுப்பத் தொடங்கி விடும்.

ஒற்றை நூலுக்குள் உலகின் ஓராயிரம் வரலாறுகளை உணர்த்தியும் சமூகத்தின் போக்கில் நிலவிடும் சங்கடங்களை விளக்கியும் கொடுமைகளின் நீள்கரங்கள் நசுக்கிடும் வறுமையின் வாழ்வை உணர்த்தியும் எழுதப்பட்டு இருக்கும் புனைவிலக்கிய நதியில் நீந்திட நூல் சகலவித படைப்புகளின் விமர்சனம் என நின்று நம்மை வேறு தளத்திற்கு அழைத்துச் செல்கிறது.

சிறுகதைகள் மொழிபெயர்ப்புகள் கதைகள் நாவல் நாடகம் பயணக்கட்டுரை என இலக்கியத்தின் பன்முக வகைமைகளுக்குள் புகுந்து கொண்டு பலவித மொழிகளின் புலமைகளுக்குள் தம்மை மூழ்கடித்தபடி இலக்கியங்கள் பகிரும் புதையல்களை நமக்காக அள்ளித் தந்திருக்கும் நூலாசிரியரின் பரந்து விரிந்த வாசிப்பு அனுபவம் சிறப்பானதொரு நூலாக ஒளி வீசிட உதவுகிறது.

பெண் மீதான மயக்கம் ஆணுக்குள் உருவாக்கும் வன்முறைகளை பாலியல் சீண்டல்களை அடிமையாய் வைத்து அடித்து உதைப்பதை தனிமைச் சிறைக்குள் தள்ளி தத்தளிக்க வைப்பதை என பல்வேறு தீயவற்றை உண்டாக்கி தருகிறது. உலகின் எல்லா மொழிகளிலும் நடைபெறும் இந்த அடிமைத்தனத்தை எழுத்தாளர்கள் எழுதிக் கொண்டே இருக்கிறார்கள். கல்வியின் மலர்கள் பெண்களை மகிழ்வித்தாலும் அவர்களுக்குள் ஒளிந்திருக்கும் ஈர மனதில் ஆசைகளை விதைத்தே ஆண்கள் தமக்கான பகடைக்காய்களை உருட்டிக் கொள்ளும் அவலம் இன்னும் தீர்ந்த பாடு இல்லை.

போர்களும் வன்முறையும் தொற்று நோய்களும் மனித வாழ்வில் நீங்காத துயர்கள் என்பதை இன்னும் அறிந்து கொள்ளாமலேயே ஓடிக் கொண்டிருக்கும் மக்களின் அறியாமைக்குள் மதமும் அரசியலும் மேலும் மேலும் விஷ விதைகளைத் தூவி விடுகின்றன. பிஞ்சுகளின் மனதில் உலகத்தை காட்டும் கல்வியின் பயனாக அறிவும் உழைப்பும் மலர்வதை உறுதி செய்யும் அதே நேரம் சக மனிதர்கள் மீதான அன்பையும் கருணையையும் அவர்களின் மனங்களில் ஊன்றுவதை கல்வி இன்னும் கண்டு கொள்வதில்லை.

இயற்கையின் அற்புத எல்லை மீறி தன்னைத்தானே உலகின் கடவுளென கொண்டாடியபடி மனிதன் செய்யும் ஈவு இரக்கமற்ற அழிவின் தடங்கள் மக்களை உயிர்களை விலங்குகளை காவு கொடுத்து நகர்கிறது. இயற்கையை காத்திட பழங்குடியினரும் எளிய மனிதர்களும் படும் பாட்டையும் அவர்களை நசுக்கும் அரசின் ஒடுக்கு முறைகளும் இன்னும் மாறாமல் தொடரும் அவலத்தை எதைக் கொண்டு முற்றுப்புள்ளி வைப்பது.?

அரசு அதிகாரத்தின் உச்சியில் இருப்பவர்கள் தனக்கு கீழான மனிதர்களை அணுகும் விதத்தை விவரிக்கும் நாவல்கள் வழியில் மனித மனங்களில் கசடுகளும் அவற்றின் மீதான பேராசையும் அவனைத் தோலுரித்துக் காட்டுவதை நூல்களின் வழியே விவரிக்கும் ஆசிரியர் நம்மை வாசிப்பதன் அடுத்த நிலைக்கு இழுத்துச் செல்கிறார்.

அன்பையும் கருணையையும் நட்பெனக் கொண்டு சக மனிதர்களுக்காக நடமாடி மகிழும் இனத்தை மறந்து மனிதத்தைப் பற்றிக் கொண்ட மனிதர்களுக்குள் மதப்பித்து பிடித்த பின் மிருகத்தை விட கேவலமாக நடந்திடும் போக்கும் மனப்பான்மையும் உருவாவதை எப்படி தாங்கிக் கொள்வது? தேசத்தின் பிரிவினையில் ஏதுமறியா குழந்தைகளும் பெண்களும் இலக்காக மாறி எரிந்தும் கொலையுண்டும் பாலியல் வன்கொடுமைக்குள் சிக்குண்டும் சிதறிப் போனதை கண்கூடாக காட்டும் நூல்களை வாசிக்கையில் மனித மனத்தின் போக்கை அறியாமல் நமக்குள்ளேயே துடிக்க வேண்டிய நிலைக்குள் தள்ளப்படுகிறோம்.

ஆணாதிக்கம் நிறைந்த சமூகத்தில் தனக்கு ஏற்படும் துயரங்களை எல்லாம் பொறுமை எளிமை அன்பு போன்ற அரிய குணங்களால் எதிர்கொண்டு சொல்ல முடியாத துயரத்தையும் இன்பமாக மாற்றிக் காட்டும் பெண்களின் அன்பையும் அமைதியையும் மட்டுமே விதைக்கும் நாவலாக மலர்கிறது தி கலர் பர்ப்பிள். அலிஸ் வாக்கர் எழுதிய இந்த நாவல் கடிதங்களின் மூலம் சொல்லப்படும் புதிய இலக்கிய வகைமைகளில் ஒன்று. நாவலில் இருக்கும் 90 கடிதங்களில் 50 கடிதங்கள் நாவலின் நாயகி கடவுளுக்கு எழுதும் கடிதங்கள் மீதி 40 கடிதங்கள் அவளின் பாசமிகு தங்கைக்கு எழுதும் கடிதங்கள்.

தொடர்ந்து வரும் போர்களும் தொற்று நோய்களும் மனித வாழ்வு எவ்வளவு அர்த்தமற்றது என்பதன் அடையாளங்கள். நிச்சயமற்ற நிரந்தரமற்ற இவ்வுலகில் மனிதர்கள் அன்புடனும் ஆதரவுடனும் வாழ்ந்திட வேண்டும் என்பதைக் கற்றுக் கொடுக்கிறது ஆல்பர்ட் காம்யூ எழுதிய தி பிளேக் நாவல்.

கல்வியைக் கற்றுணர இயற்கையும் பரந்த வெளியும் உதவி செய்யலாம். கட்டிடங்களுக்குள்ளும் வகுப்பறைக்குள்ளும் கரும்பலகையிலும் கற்றுக் கொள்ளப்படுவது மட்டுமல்ல கல்வி சிதைந்து போன ரயில் பெட்டிகளையும் கல்வி நிலையமாக மாற்றி குழந்தைகளின் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் இரட்டிப்பாக்கும் இயற்கையோடு இணைந்த கல்வியை கற்றுக் கொடுத்த மாமனிதர் கோப்பயாசி நிறுவிய டோமோயி பள்ளி பற்றிய நாவல் போட்டோ சாங் கல்வியின் மூலம் குழந்தைகளுக்கு எவ்விதமான கற்றலை அறிமுகம் செய்ய வேண்டும் என்பதை சிறப்பாக எடுத்துரைக்கிறது.

அந்நியர் ஆட்சிக்கு எதிராக மட்டுமின்றி சமகால நில பிரபுத்துவ கொடுமைகளுக்கு எதிராகவும் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் சோட்டா நாக்பூர் பகுதியில் போராடிய பிர்ஷா முண்டாவின் தலைமையிலான வீர வரலாற்றை வங்க எழுத்தாளர் மகா ஸ்வேதா தேவி எழுதிய நூல் ஆரண்யெர் அதிகார். இது காட்டில் உரிமை என்ற தலைப்பில் சு. கிருஷ்ணமூர்த்தி அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்த நூலின் வழியே பழங்குடியினர் இயற்கையை காப்பதற்காக தமது இன்னுயிரையும் கொடுப்பதற்கு தயாராக இருந்த தியாகத்தை நம்மால் உணர முடிகிறது.

ரஷ்ய எழுத்தாளர் கோகால் அவர்கள் எழுதிய நாவல் ஓவர் கோட். அதிகார வர்க்கத்தின் அலட்சியத்தை நம் கண் முன்னே காட்சிப்படுத்துகிறது.

சாதி வெறி ஆணாதிக்கம் பாலியல் வன்முறைகள் மொழி இனம் மதம் கடந்து பெண்களின் துயரத்தை அதிகமாக்குகிறது என்பதை வெளிச்சம் போட்டு காட்டுகிறது பிரியா விஜயராகவன் எழுதிய அற்றவைகளால் நிரம்பியவள் நாவல்.

பணத்தின் பின்னே பேயென அலையும் மனிதர்களின் பேராசைகளால் ஒளி வீசும் கற்களின் தேடல் எப்படியெல்லாம் மனிதர்களை நோய்வாய்ப்படுத்துகிறது என்பதையும் கண்ணகியின் மாணிக்கப் பரல் நடந்த பாதையின் வழியாக எழுதிச் சென்று இரு வேறு பயணங்களை இணைக்கும் புள்ளி என சிலப்பதிகாரத்தை நிறுத்திய மிளிர்கல் நூலின் வழியே அழகானதொரு புனைவிலக்கியத்தை எழுதியிருக்கும் இரா முருகவேள் அவர்களின் நூல் பற்றிய விமர்சனத்தின் வழியே பணத்தின் பின்னால் அலையும் மனிதர்கள் தங்களின் தேவைக்காக எதை வேண்டுமானாலும் செய்வதற்கு தயாராகிறார்கள் என்பதை அறிய முடிகிறது..

சமூக செயல்பாட்டாளராக அனுதினமும் மக்களிடையே அறிவையும் கல்வியையும் விதைத்திடும் பேராசிரியர் அவர்களின் இந்த நூல் ஒரே சமயத்தில் 16 இலக்கியங்களை அவை கூறும் வரலாறுகளை அந்த வரலாற்றின் வழியே உலகில் நிலவும் வன்கொடுமைகளை சமூக பின்னடைவுகளை நம்மால் உணர்ந்து கொள்வதற்கு சிறப்பானதொரு கட்டமைப்பாகத் திகழ்கிறது. இந்த நூல் தான் சொல்ல வந்த கருத்துக்களை தெள்ளத் தெளிவாக வரையறுத்துச் சொல்லி தனது பார்வையின் வழியே வாசகனின் நெஞ்சுக்குள் குறி தவறாது அம்பு எய்தி அதன் வழியே சிந்தனை இலக்கை அடைகிறது.

நூல் மதிப்புரை கட்டுரைத் தொகுப்பு

முதல் பதிப்பு 2021

பக்கங்கள் 152

விலை ரூபாய் 170

வெளியீடு கருத்து =பட்டறை மதுரை

# கண்ணன் கவிதைகள்



மாதமொரு முறை
தண்ணீர் மாற்றுகையில்
தொட்டி மீன்கள்
செத்துப் பிழைக்கும்
சில நொடிகள்
நுரை தள்ளி
கால்மடங்கி
சுமை தாளாமல்
கீழே விழுகையில்
பலமுறை இந்நொடிகள்
பாழாய்ப்போன இவ்வாழ்வில்

❍

உள்ளிருக்கும் ரணங்களை
மூலிகை தொட்டு
மயிலிறகால் வருடி
குணப்படுத்தும்
மதுரை டு சேலம் பேருந்தில்
ராகதேவனின்
ராக ராஜ்ஜியம்

❍

கடன் வாங்கிய புத்தகங்களைத்
தவறாமல் அனுப்பியாச்சு
அலமாரியில் அவை இருந்த
வெற்றிடத்தை
என்ன செய்ய?
தினமும் பல் துலக்குகிறேன்
தினமும் காலையில் காபி குடிக்கிறேன்
தினமும் குளிக்கிறேன்
தினமும் உணவருந்துகிறேன்
தினமும் அலுவலகத்தில் அதே நாற்பது பேருடன்
பேசுகிறேன்
தினமும் அதே நூறு ரிப்போர்ட்களை
ஓட்டுகிறோம்
தேய்ந்து போன ரெக்கார்ட் பிளேயர் போல
செய்ததையே செய்கிறேன்
தினமும் செய்கிறேன்
திரும்பத் திரும்ப செய்கிறேன்
கடும் கோடையில்
கரிசல் காட்டில்
கால்கடுக்க நடப்பவனுக்கு
ஒரு குவளைத் தண்ணீராய்
தினமும் படிக்கக் கிடைத்து விடுகிறது
எனக்குப் பிடித்த
புத்தகங்கள்

ஸ்ரீவி.முத்துவேல், துபாய்


# இரண்டாமிரவில் உடையும் ஆசையணை

அந்திச்சூரியச் சிமிழைத்
தொட்டுத் தொட்டு
உடலெல்லாம் பூசி நீராட
திறக்கும் மாசியிரவுக் கதவு

பூத்திருக்கும் நட்சத்திரங்களை எல்லாம்
கோர்த்துக் கோர்த்து
நான்கடி ஒற்றைச்சடையில் சுற்றுகையில்
காலியாகிப்போன வானம்

முழுநிலவு பொடியை
வெண்மேகத்தால் தொட்டுத் தொட்டு
முகத்தில் பூச பூச
ஒளிரும் பிரம்மக் கமலம்
வெட்கத்தை அவிழ்த்துக்
காமத்தை உடுத்திக் கொள்ள
கதவைத் தட்டும் மின்மினி

அசைவ விருந்தையும் ஆசைகளையும்
அள்ளித் தின்று
திருமண அசதியைத் தூக்கித்தெறிந்து
இரண்டாமிரவை முதலிரவாக்க
காத்திருக்கும் மாப்பிள்ளைக்கழுந்து...




# முந்தைய இதழ்கள்



காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
வைகாசி - 2022


சித்திரை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்



காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மார்கழி - 2021


மாசி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஆடி 2019


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஐப்பசி 2019


தை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்


காற்றுவெளி
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ் - 2020


பங்குனி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்

